# பல்லவி

இசை, நடன, காலாண்டிதழ்





கொழும்பு தமிழ்ச் ச
நூலகம்

2 ஆடி 1988

'பல்லவி'

நீடு வாழி!

V

# R. சிவானந்தன்

நிர்மலா ட்ரான்ஸ்போட்,

106, சிவன் வடக்கு வீதி,

யாழ்ப்பாணம்.

# PALLAVI

A music and dance quarterly

JULY 1988

நிர்வாக ஆசிரியர்:

W. S. செந்தில்நாதன்
*B. A., Dip. in Ed., F. R. A. S.*
வழக்கறிஞர்

❊

இணை ஆசிரியர்கள்:

S. N. நடராஜ ஐயர்
*Dip. in Music*
இளைப்பாறிய இசை ஆசிரியர்

❊

S. கணபதிப்பிள்ளை
சங்கீத பூஷணம்
கல்வி அதிகாரி, இசை

❊

A. K. கருணாகரன்
சங்கீத வித்வான்
விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழக நுண்கலைப் பிரிவு

❊

P. முத்துக்குமாரசாமி சர்மா
சங்கீத பூஷணம்
சென்னை



நிர்வாக அலுவலகம்:
167, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23558



தனிப்பிரதி ரூபா 10/-
வருட சந்தா ரூபா 50/-
(தபாற் செலவுட்பட)


# பல்லவி

இசை - நடனக் காலாண்டிதழ்
ஆடி, 1988

## அநுபல்லவி


1. ஆசியுரைகள்
2. ருக்மிணிதேவி அருண்டேல்
3. வெளிநாடுகளில் நம் கலைஞர்கள்: டாக்டர் பிரேமிளா குருமூர்த்தி
4. ஸ்ருதி மாதா
5. சங்கீதத்தில் பாவம்
6. இந்திய சங்கீத நூல்கள்
7. மிருதங்கம்
8. தம்புரா இசைப்போட்டி
9. கலைப்புதிர்
10. ஆர் முத்துச்சாமி
11. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
12. குறுக்கெழுத்துப் போட்டி
13. தியாகராஜ கீர்த்தனை விளக்கம்
14. கச்சேரி - விமர்சனம்
15. செய்திகள்


சரணம்

# ஆசியுரைகள்

Dr. Rukmini Ramani
*M. A., B. Ed., Ph. D.*
D/o Papanasam Sivan
Lecturer
Tamil Nadu Govt. Music College,
Madras

பல்லவி இதோ துவங்கிவிட்டது
பல்லாயிர மனங்கள் மலர்வதற்கே
பல்லுயிர்களும் பகுத்தறிவடைவதற்கே
பல்லுலகிலும் பவனிவருவதற்கே
பல்லவி இதோ துவங்கிவிட்டது

தானும் மலர்ந்து மணம் வீசிடுமே
பொன்வரை புகழ்ஓங்கி வளர்ந்திடுமே – விண்
மீனென் மின்னி மனதைக் கவர்ந்திடுமே
ஆனந்த பைரவி ராகம் தானத்துடன்
பல்லவி இதோ துவங்கிவிட்டது

அனுபவம் பலவும் அடைந்துயர்ந்திடுமே
தேனுடன் பாலாய் நாவிலினித்திடுமே
அனுதினம் புதுமைகள் பலபல படைத்திடுமே
அனுபல்லவி சரணமுடன் அமைந்த பாடல் போல்
பல்லவி இதோ துவங்கிவிட்டது

* * * *

பல்லவி பார்த்து மகிழ்ச்சியடைந்தேன் அடாத மழை ... ... ... என்றாலும் இந்த தற்கால சூழ்நிலையிலும் முயற்சி எடுத்து இப்படியான ஒரு மலரை வெளியிட்ட உங்களை எப்படிப் பாராட்டுவது?

A. S. ராமநாதன்
இசைக் கல்லூரி,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

## " பல்லவி "

பெயர் பொருத்தம் மிக நேர்த்தி, பதம் லயம் வின்யாசம் என்ற மூன்றும் படிப்படியாய் ஏற்றமிகு இலக்கணமாய் அமைந்துவர இச்சிறியேனுடைய மனம் கனிந்த வேண்டுதலை எல்லாம் வல்ல இறைவனுக்கு சமர்ப்பிக்கிறேன்.

பதமாக ஆரம்பித்து, கட்டுப்பாடான லயத்துடன் வளர்ந்து, கவர்ச்சிகரமான வின்யாசத்துடன் அளப்பரிய பெருமையுடன் விளங்க ஆண்டவனை இறைஞ்சுகிறேன். (பதம் = பக்குவம், லயம் = கட்டுப்பாடுடன் ஒன்று சேருதல், வின்யாசம் = விபரமான விளக்கவுரைகள்)

" மனதில் பயமின்றி உண்மை எழுதுவேன், உண்மையே எழுதுவேன், உண்மையையன்றி வேறொன்றும் எழுதேன் " என்ற சத்தியமான மார்க்கத்தில் பீடு நடைபோட்டு உலவிவர " பல்லவி "க்கு என் ஆசிகள்.

— கல்கத்தா கிருஷ்ணமூர்த்தி

* * *

It is praiseworthy that you were able to bring out such a valuable magazine under the present trying conditions in Jaffna. Wish you all success.

S. K. Mathi,
*N. S W.*
*Australia.*

" பல்லவி " சித்திரை இதழில் "ஒரு பயனுள்ள கருத்தரங்கு" என்னும் தலைப்பில் வெளிவந்த கட்டுரையில் குறித்த கருத்தரங்கின் மாலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிய வித்வான்களின் பட்டியலில் செல்வி பாக்கியலெட்சுமி நடராசாவின் பெயர் தவறுதலாக விடப்பட்டுள்ளது. தவறுக்கு வருந்துகிறோம்.

— நிர்வாக ஆசிரியர்

# ருக்மிணிதேவி அருண்டேல்



இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் (நமது நாட்டிலுங் கூட) நடனம் என்பது ஒரு குறிக்கப்பட்ட குலத்தவரின் வித்தையாகவே இருந்து வந்தது. ''சதிர்'' எனப்படும் இந் நடனமானது முதலில் கோவில்களிலும் பின்னர் அரச அவைகளிலும் இடம்பெற்றது. தேவதாசிகளால் ஆடப்பட்டு வந்த இவ்வாட்டத்தைத் ''தாசியாட்டம்'' என்றும் ''சின்னமேளம்'' என்றும் கூறுவர். பின் சில தனவந்தர்கள் கல்யாணம் முதலிய சில வைபவங்களையொட்டித் தத்தம் வீடுகளில் இந் நாட்டிய நிகழ்ச்சிகளை நடாத்தினர். இதிலிருந்தே இக்கலைக்கு ஒரு விழுக்காடு ஆரம்பமாயிற்று. அக்காலத்தில் உயர் குலத்தவர்கள் எவரும் இக் கலையைப் பயிலவோ அல்லது கற்பிக்கவோ முன்வரவில்லை. அப்படியான ஒரு காலச் சூழ்நிலையில் நல்ல பண்பாடுடைய பிராமண குலத்தில் உதித்து நடனக் கலையைப் பயின்று அதனைப் பரதநாட்டியம் என்று கலையுலகுக்கு அறிமுகம் செய்து வைத்தவர் திருமதி ருக்மிணிதேவி அருண்டேல் ஆவார். ''தேவதாசிகள் நெடுங்காலமாக மிகவும் சிறந்த தெய்வபக்தியுடன் தூய்மையான இக் கலையைப் பாதுகாத்து வந்தனர். ஆனால் பிற்காலத்தில் மக்கள் சமுதாயமே இக் கலையை இவ்வளவு கேவல நிலைக்குக் கொண்டுவந்து விட்டது. எனவே சமுதாயமே இப் பொறுப்பை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று கூறிய திருமதி ருக்மிணிதேவி ''இக் கலையை மீண்டும் தூய்மையாக்கிக் கட்டி எழுப்பி அதற்கு ஒரு புத்துயிர் அளிக்கப் பொன்னிலுள்ள மாசை அகற்றுவதற்கு அதனைப் புடம் வைப்பதுபோல் இக் கலையையும் நீறுசெய்ய வேண்டியிருந்தது'' என்றார்.

ருக்மிணிதேவி 1904-ம் ஆண்டு (இது ஒரு லீப் வருடம்) மாசி மாதம் 29-ம் திகதி மதுரையிற் பிறந்தார். இவருடைய தந்தை நீலகண்ட சாஸ்திரி ஒரு பொறியியலாளர். சிறந்த வைதீக பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருடைய மூதாதையர் பலர் வடமொழியிற் பாண்டித்தியம் பெற்றிருந்தனர். தாய் பெயர் சேஷம்மா. எட்டுப் பிள்ளைகளில் ஆறுவது பிள்ளையான ருக்மிணி சிறுவயதிலிருந்தே சங்கீதம் பயிலவேண்டுமென்று விரும்பினர். ஆனால் நடனத்தில் இவருக்கு எள்ளளவேனும் நாட்டமிருக்கவில்லை அக் காலத்தில் பெயர்பெற்ற வித்வான்களாகிய மகா வைத்தியநாதையரிடமும் அவரின்பின் அவருடைய புத்திரன் சபேசையரிடமும் சங்கீதம் பயின்றார். ஆனால் 1919-ம் ஆண்டில் தந்தையார் காலமானதுடன் இவருடைய கல்வி முற்றுப்பெற்றது.

இவரது தந்தையார் ஒரு வைதிகரெனினும் ஒரு முற்போக்குச் சிந்தனையாளர்: தனது மூத்த மகள் சிவகாமு இளம் வயதிலே மணம் முடித்து வாழ்க்கையில் தோல்வி கண்டதையடுத்து பெண் பிள்ளைகளைப் பால்ய வயதில் விவாகம் செய்து வைப்பதை எதிர்த்து ஆரம்பிக்கப்பட்ட ஓர் இயக்கத்தில இவர் முன்னணியில் நின்று உழைத்தார். மேலும் இவரும் இவரது குடும்பத்தினரும் அப்போது

சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த பிரம்ம ஞான சங்கத்தில் (Theosophical Society) மிகவும் ஈடுபட்டிருந்தனர். அதனால் அச் சங்கத்தில் அப்போதிருந்த டாக்டர் அன்னி பெசன்ற் அம்மையார், டாக்டர் ஜோர்ஜ் சிட்னி அருண்டேல் ஆகியோருடன் நெருங் கிய தொடர்பு ஏற்பட்டது. டாக்டர் அருண்டேல் ஓர் ஆஸ்திரேலியர்; சிறந்த கல்விமான்; நல்ல சுபாவமுடையவர்; அழ கானவர்; பண்புடையவர்; கலைகளில் மிக வும் ஆர்வங் கொண்டவர். இந்தியாவிலும் அதன் கலாச்சாரத்திலும் இவ்விருவரும் மிகுந்த பற்று வைத்திருந்தனர்.



டாக்டர் அருண்டேலை ருக்மிணிதேவி விவாகம் செய்ய விரும்பினர். அப்போது இவருக்கு வயது பதினாறு. அவருக்கு நாற் பது. இவர்களுடைய திருமணத்துக்கு இவ ரது சுற்றத்தாரும் நண்பர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். நல்ல பிராமண குடும்பத்திற் பிறந்த இவர் இப்படி ஒரு வெளிநாட்டவரை அதுவும் இவ்வளவு வயது வித்தியாசத்தில் விவாகஞ் செய்யவேண்டிய தில்லையென்பதே காரணம். எனினும் இவ ருடைய விருப்பத்திற்கிணங்க விவாகம் நடந்தே முடிந்தது. திருமணம் முடிந்ததும் இருவரும் உலகின் பல நாடுகளுக்குச் சென்றனர்.

1924-ம் ஆண்டில் இவர்கள் இங்கிலாந் தில் இருக்கும்போது பலே (Ballet) நடனத் தில் மிகவும் பிரபல்யமான ரஷ்யப் பெரி யாராகிய அன்னா பவ்லோவா என்பவரின் நாட்டிய நாடகத்தைப் பார்க்கச் சென்ற னர். அதனைப் பார்த்தவுடன் இவர் மிக வும் பரவசப்பட்டுத் தானும் பலே நடனம் பயிலவேண்டுமென்று மிகவும் விரும்பினர். அதன்பின் 1928-ல் கிழக்கிந்திய தீவுகளில் உள்ள பல்வேறு நகரங்களில் டாக்டர் அருண்டேலின் சொற்பொழிவுகள் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது இவரும் கூடவே சென்றிருந்தார். இவர் கள் சென்ற நகரங்களிலெல்லாம் ஏறக் குறைய அதே நாட்களில் பவ்லோவா நடனக் குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி களும் நடந்தன. இவற்றையெல்லாம் இவ் விருவரும் தவறாது பார்த்து மகிழ்ந்தனர். பின் அங்கிருந்து அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்காகக் கப்பலேறிய இவர்கள் அதே கப்பலில் பவ்லோவா நடனக் குழு வினரும் பயணஞ் செய்வதைக் கண்டு அனந்தங் கொண்டனர். கப்பலில் அவர் களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த நட்பின் பயனாக இங் கிலாந்திலேயே பலே நடனம் பயில பவ் லோவா இவருக்கு உதவியதுமல்லாமல் இவர் இந்திய நடனம் பயிலவேண்டுமென் றும் தூண்டப்பட்டது.

1935-ம் ஆண்டு தைமாதம் முதலாந் திகதி சென்னை மியூசிக் அகடமியில் பந்த நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை (தஞ்சா வூர் கே. பி. சிவானந்தம் அவர்களின் பாட்டனார்) அவர்களால் நடத்தப்பட்ட * ஜீவரத்தினம், ராஜலட்சுமி ஆகியோரின் நடன நிகழ்ச்சிக்கு ருக்மிணிதேவி சென் றிருந்தார். அதைப் பார்த்துப் பிரமித்துப்

* சில நூல்களில் சபாரஞ்ஜிதம் எனக் கூறப்பட்டுள்ளது.

போன இவருக்கு அப்போதுதான் இந்திய நடனம் பயிலவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. அப்போது இவருக்கு வயது முப்பத்தொன்று. எனினும் தனது ஆர்வ மேலீட்டினாலும் விடா முயற்சியினாலும் மயிலாப்பூரில் இருந்த கௌரியம்மா என்பவரிடமும் பின் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடமும் நடனம் பயின்று சில மாதங்களிலேயே எல்லோராலும் பாராட்டக்கூடிய ஒரு நிலையை அடைந்தார்.

சுப்பராயன் என்பவரே நட்டுவாங்கம் செய்தார். 1936ஆம் ஆண்டு பங்குனி மாதம் 15ஆந் திகதி நடைபெற்ற இந்நிகழ்ச்சியைப் பற்றிய விமர்சனம் மறுநாள் இந்து பத்திரிகையில் வெளியாயிற்று. நிகழ்ச்சி மிகவும் அபாரமாக இருந்ததெனப் பலரும் பாராட்டினர்.

இதன்பின் பரதநாட்டியத்தை இவர் தொழிலாகவும் குறிக்கோளாகவும் கொண்



இவரது முதலாவது நடன நிகழ்ச்சி அடையாற்றில் பிரம்மஞான சங்கத்தின் வைர விழாவின்போது நடைபெற்றது. இதனை இவரது குருவாகிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை பயிற்சி போதாதென்ற காரணத்தால் எதிர்த்தார். சேர் சி. பி. இராமசுவாமி ஐயர், ரி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியார் ஆகியோரும் ஆட்சேபித்தனர். "இது ஒரு அரங்கேற்றமல்ல, நண்பர்கள் மத்தியில் ஒரு பொது நிகழ்ச்சி" என்று சமாளித்து ஒருவாறு நிகழ்ச்சியை நடத்தி முடித்தனர். இதற்கு இவரது குரு போகவில்லை. சொக்கலிங்கம்பிள்ளையின் மகன்

டார். 1936ஆம் ஆண்டு நீதிபதி பி. வி. ராஜமன்னார், 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி முதலிய பிரமுகர்களின் உதவியுடன் ஆட்ஸ் அகடமி என்னும் கலைமன்றத்தைத் தாபித்தார். இம்மன்றமே இப்பொழுது கலாக்ஷேத்ரா என்ற பெயருடன் விளங்கி வருகிறது. "ஒரு காணியோ அல்லது கட்டடமோ ஒன்றுமில்லாமல் ஒரு மரத்துக்குக் கீழே ஒரேயொரு மாணவியுடன் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம்" என்று கலாக்ஷேத்ரா வின் பொன் விழாவில் இவர் கூறினர். இங்கு நடனம், இசை முதலிய நுண்கலைகள் பயிற்றப்பட்டு வந்தன. அக்காலத்தில்

தத்தம் துறைகளில் பெயர்போன வித்வான்கள் ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். மீனாட்சிசுந்தரம்பிள்ளை, சொக்கலிங்கம் பிள்ளை, தண்டாயுதபாணிப்பிள்ளை, காரைக்குடி சாரதாம்பாள் முதலியோர் பரதநாட்டியமும் டைகர் வரதாச்சாரியார் முடிகொண்டான் வெங்கட்ராமையர், பாபநாசம் சிவன், மைசூர் வாசுதேவாச்சாரியார் முதலியோர் வாய்ப்பாட்டும், காரைக்குடி சாம்பசிவ ஐயர், கிருஷ்ணமாச்சாரி ஆகியோர் வீணையும் பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் கோட்டு வாத்தியமும் கற்பித்தனர். இப்பொழுது அங்கு முப்பதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களும் உலகிற் பல பாகங்களிலிருந்தும் 150க்கு மேற்பட்ட மாணவர்களும் இருக்கின்றனர்.

1945ஆம் ஆண்டில் டாக்டர் அருண்டேல் காலமானார். அவருடைய மறைவு ஒரு பெரிய இழப்பெனினும் குழந்தைகளுலகத்திலே அவர் கண்ட இன்பத்தினால் தொடர்ந்தும் பல தொண்டுகள் புரிந்தும் மகத்தான சேவை செய்தும் தனது வாழ்க்கையை நடாத்திவந்தார்.

கலாக்ஷேத்ராவில் பலமாணவர்கள் வருடந்தோறும் இசை, நடனம் என்பவற்றைப் பயின்று வெளியேறுகிறார்கள். தற்போது நடன உலகில் பெயர் பெற்று விளங்கும் சாரதா ஹொவ்மன், அடையாறு லக்ஷ்மன், கிருஷ்ணவேணி லக்ஷ்மன், ஷாந்தாவும் தனஞ்ஜெயனும், அம்பிகா, லீலா சாம்சன் முதலிய பலர் அங்கு பயின்றவர்கள். இவர்கள் இப்போது தங்கள் சொந்த நடனப் பள்ளிகளை நடாத்தி வந்தாலும் தங்கள் பழைய பள்ளியுடனும் தாங்கள் மிகுந்த பற்று வைத்திருந்த ''அத்தை'' யுடனும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர். இப்போது பிரபல நடன ஆசிரியராக விளங்கும் அடையாறு லக்ஷ்மன் பல மேடைகளில் ருக்மிணிதேவியுடன் சேர்ந்து ஆடியிருக்கிறார் ருக்மிணிதேவியின் மேடை நிகழ்ச்சியைப் பார்க்கும் போது நாம் வேறோர் உலகத்திற் சஞ்சரிப்பது போன்ற ஓர் உணர்வு எம்மிடம் ஏற்படுகிறது என்று அவர் கூறியிருக்கிறார்.

இவர் பரதநாட்டியம் நிகழும் மேடைகளில் பல பாரிய மாற்றங்களைச் செய்திருக்கிறார். ஆடுபவரின் உடை, நடை, நகைகள், ஒப்பனை முதலியவற்றில் இப்போது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல சீர்திருத்தங்களைக் கொணர்ந்தார். முன்பெல்லாம் நட்டுவனார் ஆடுபவரின் பின்னே மேடை முழுவதும் ஓடித் திரிவது வழக்கம். மேடையில் ஓர் அருகே நட்டுவனாரும் பக்க வாத்தியகாரரும் அமர்ந்திருக்கும் தற்போதைய முறையையும் இவரே ஆரம்பித்தார்.



புதிய பாணியினாலான சில நாட்டிய நாடகங்களை இவர் சிருஷ்டித்திருக்கிறார். இது இவர் பலே பயின்றதன் விளைவாக இருக்கலாம். இவர் இயற்றிய நாட்டிய நாடகங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

உலகப் பிரசித்தி பெற்ற கல்வியாளரான டாக்டர் மாரியா மொன்ரசூரி அம்மையாரை 1939ம் ஆண்டில் இவரும் இவரது கணவருமே இந்தியாவுக்கு வரவழைத்தனர். இவ்வம்மையார் இந்தியாவில் பல இடங்களில் நிகழ்த்திய சொற்பொழிவுக

ளின் விளைவாக நாடு முழுவதும் புதிய முறையிலான பல பாலர் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

ருக்மிணிதேவி மிருகங்களிலும் பறவைகளிலும் மிகுந்த அன்புடையவராயிருந்தார். 1962ம் ஆண்டு தொடக்கம் 1980ம் ஆண்டு வரை இந்திய பிராணிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவராக இருந்தார். 1958ம் ஆண்டு இவருக்கு விக்டோரியா ராணிப் பதக்கம் வழங்கப்பட்டது. மேலும் 'பிராணி மித்ரா' என்னும் பட்டத்தையும் இவர் பெற்றார்.

இவர் இரு தடவைகள் இந்திய ராஜ்ய சபாவின் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். 1977ம் ஆண்டில் இந்தியாவின் பிரதமராயிருந்த ஸ்ரீ மொராஜி தேசாய் இந்திய ஜனாதிபதிப் பதவிக்கு இவரை ஒரு வேட்பாளராக நியமிக்கக் கோரிய போது இவர் அதனை ஏற்க மறுத்து விட்டார். 1956 ஆம் ஆண்டு பத்ம பூஷண் விருதும் 1957 இல் சங்கீத நாடக அகடமி விருதும் இவருக்கு வழங்கப்பட்டன. 1960ம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள வெயின் பல்கலைக்கழகத்தாலும் 1969ம் ஆண்டு ரவீந்திரபாரதி பல்கலைக்கழகத்தாலும் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டன.

இவர் 1986ம் ஆண்டு மாசி மாதம் 24ம் திகதி தமது 82வது வயதில் புற்று நோயினால் சென்னையில் காலமானார். கலாக்ஷேத்ராவின் தரத்தைப் பேணிப்பாதுகாப்பதற்கும் அதன் உயர்ந்த சேவை தொடர்ந்து நீடிப்பதற்குமான ஒரு நிரந்தர முகாமைத்துவ முறையை இவர் இறப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன் சிறப்பாகச் செய்து வைத்தார். "நான் புகழுக்காக நடனமாடவில்லை. ஒரு மகத்தான சேவையின் மேலுள்ள ஆர்வ மேலீட்டினாலேயே இவ் வேலையை ஆரம்பித்தேன். அதே அர்ப்பணிப்பு உணர்வோடு எம் எதிர்காலச் சந்ததியினர் தொடர்ந்தும் இச்சேவையில் ஈடுபடுவாரென நம்புகிறேன்" என்று அப்போது அவர் கூறினார்.

கோயில்களில் இப்போது நடன நிகழ்ச்சிகள் நடைபெறுவதில்லை யாதலின் நடனங்கள் நடைபெறும் அரங்குகளில் கோயில் போன்ற ஒரு சூழ்நிலை உருவாக வேண்டுமென்றும் தமது நடன நிகழ்ச்சிகள் யாவும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்வது போலவே அமைந்துள்ளன என்றும் அவர் அடிக்கடி கூறுவார்.

டபிள்யு. எஸ். செந்தில்நாதன்

ஆதாரம்: 1 Sruti, June, July, August, 84
2 Indian & Foreign Review, 31st March 1986

"மேல் நாட்டினர் ஒருவரை மணந்து கொண்டிருந்தாலும் அதன் நிழல் கலைகளில் விழுவதற்கு இடந்தரவில்லை. டாக்டர் அருண்டேலும் டாக்டர் அன்னிபெஸண்டும் காலை மடித்துத் தரையிலே உட்கார்ந்துதான் வேலை செய்வார்கள். கலையின் வளர்ச்சியில் ருக்மிணிதேவி காட்டிய ஆர்வத்திலும் அப்படி ஓர் எளிமை இருந்தது. மரத்தின் நிழலில் வகுப்புகள் நடந்தன. அழகான கூரைக் குடில்களில் இசையும் நடனமும் சொல்லிக் கொடுக்கப்பட்டன. குழந்தைகளும் குருநாதரும் ஆசிரமத்தில் இருப்பது போலப் பழகிக் கொண்டனர்"

நன்றி: மணியன் மாத இதழ் பெப்ருவரி, 1986

# திருமதி ருக்மிணி அருண்டேல் தயாரித்த நாட்டிய நாடகங்கள்

### வால்மீகி ராமாயணம் (6 பாகங்கள்)

| | |
|---|---|
| சீதா சுயம்வரம் | 1954 |
| ஸ்ரீராம வனகமனம் | 1960 |
| பாதுகா பட்டாபிஷேகம் | 1960 |
| சபரி மோக்ஷம் | 1965 |
| சூடாமணி ப்ரதானம் | 1968 |
| மகா பட்டாபிஷேகம் | 1970 |

### பகவத் மேலா

| | |
|---|---|
| உஷா பரிணயம் | 1959 |
| ருக்மாங்கத சரிதம் | 1959 |
| ருக்மிணி கல்யாணம் | 1964 |
| துருவ சரித்ரம் | 1971 |

### குறவஞ்சி

| | |
|---|---|
| குற்றாலக் குறவஞ்சி | 1944 |
| கண்ணப்பர் குறவஞ்சி | 1962 |
| கிருஷ்ணமாரி குறவஞ்சி | 1971 |

### இதரவகைகள்

| | |
|---|---|
| காளிதாசரின் குமாரசம்பவம் | 1947 |
| ஜயதேவரின் கீத கோவிந்தம் | 1959 |
| தாகூரின் ஷியாமா | 1961 |
| ஆண்டாள் சரித்திரம் | 1961 |
| காளிதாசரின் சாகுந்தலம் | 1957 |
| குசேலோபாக்யானம் | 1972 |
| மத்ஸ்ய – கூர்ம அவதாரம் | 1974 |
| மீனாக்ஷி விஜயம் | 1977 |
| தமயந்தி சுயம்வரம் | 1978 |
| புத்த அவதாரம் | 1979 |
| அஜாமிலோபாக்யானம் | 1980 |
| மீரா | 1984 |

"ஒவ்வோர் இந்தியனும் பெருமைப்படக் கூடிய கலைப்பண்பாட்டை நான் எனக்குப் பின் விட்டு விட்டுச் செல்ல விரும்புகிறேன், இந்தியர்கள் பொதுவாக நாட்டியக் கலைக்குரிய பெருமையைக் கொடுப்பதில்லை. அதற்குரிய முழுப் பெருமையை உவந்து அளிக்க முன்வரும் மனப்பாங்கு உள்ளவர்களை, அந்த முறையில் தொண்டாற்றுபவர்களை தான் எனது சந்ததியாக விட்டுச் செல்ல விரும்புகிறேன்"

— கலா க்ஷேத்ராவின் பொன் விழாவை யொட்டித்
தொலைக்காட்சியில் நடந்த பேட்டியில் ருக்மிணிதேவி

# டாக்டர்
# பிரேமிளா குருமூர்த்தி



1969 ஆம் ஆண்டு தை மாதம் திருவையாற்றில் நடைபெற்ற ஸ்ரீ தியாகராஜர் ஆராதனை விழாவில் ஒருநாள் மாலை 5 மணிக்கு சிறுமி பிரேமிளாவுக்குப் பாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதைத் தனது பாக்கியம் என்று பயபக்தியுடன் நினைவு கூரும் அவர் அதுவே தனது முதல் இசை நிகழ்ச்சி எனக்கொண்டுள்ளதாகவும் சொன்னார். அந்த இசை நிகழ்ச்சியை திருச்சி வானொலி நிலையத்தாரும் அஞ்சல் செய்தது ஒரு பெருமைக்குரிய விடயமாகும்.

அதே ஆண்டு மே மாதம் 7 ஆந் திகதி கொழும்பு மகளிர் கல்லூரி (Ladies' College) மண்டபத்தில் செல்வி பிரேமிளாவின் அரங்கேற்றம் சிறப்புற நடைபெற்றது. அந்த நன்னாளில் எம் நாட்டுப் பிரமுகர்களுடன் தென்னகத்திலிருந்து சிறப்பு விருந்தினராக ஸங்கீத கலாநிதி முசிறி சுப்பிரமணிய ஐயர் மணலி இராமகிருஷ்ண முதலியார், பகீரதன், தமிழ்வாணன், டி. கே. கோவிந்தராவ் முதலியோர் வந்து கலந்து ஆசிவழங்கிச் சிறப்பித்தார்கள். அன்று திரு எம். சிவசிதம்பரம் அவர்கள் தன் வாழ்த்துரையில்

" உமது மூச்சிலே, உமது நாவிலே, உமது தொனியிலே கலை மகள் சிறப்பாக நடனமாடுகின்றார்; குறுக்கு வழிகளில் பணத்தையும், பெருமையையும் தேட எத்தனிக்காது நல்ல முறையில் கலையைக் கற்றுப் பிறந்த நாட்டுக்கும் தாய் நாட்டுக்கும் புகழைத்தேடித்தருக " என்று குறிப்பிட்டார்.

இவ் வார்த்தைகளைத் தன் இலட்சியமாகக் கொண்டு இன்று தமிழ் நாட்டில் ' மதுர இசை மாமணி ', ' ஏழிசை அரசி ' என்னும் பட்டங்களைப் பெற்று டாக்டர் பிரேமிளா கல்வித் திறமையும், இசைப் புலமையும் கொண்டு திகழ்வது குறிப்பிடத்தக்கது.

பிரேமிளா இரண்டு துறையில் M. A. பட்டங்களைப் பெற்றுள்ளார். ஒன்று இந்திய தத்துவம், மற்றது இந்திய இசை. ( ஹரி கதா காலக்ஷேபம்) இதற்காக இந்திய கலா சாரத் துறையின் புலமைப் பரிசில் பெற்று ஈராண்டுகள் ஹரி கதைபற்றி ஆராய்ச்சிகள் செய்துள்ளார். இன்று, தாம் கற்றுத் தேர்ந்த அதே சென்னைப் பல்கலைக் கழகத்தில் இசை விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

இவருக்குத் தென்னிந்திய இசை மட்டுமன்றி இந்துஸ்தானி இசையிலும் முறையான பயிற்சி உண்டு. தான்சேன் இசை விழாவிலும், கிருஷ்ணனந்தி இசை விழாவிலும் இந்துஸ்தானி இசைக்கச்சேரி நிகழ்த்திப் பலரது பாராட்டையும் பெற்றுள்ளார். முன்னாள் பிரபல திரைப்பட நடிகரும், இசை அமைப்பாளருமான ஸ்ரீநிவாஸராவ் அவர்களிடம் கர்நாடக மெல்லிசை, ஜெயதேவர் அஷ்டபதி பஜன், துளஸிதாஸ் கபீர்தாஸ், புரந்தரதாஸ் இவர்களின் பாடல்களைச் சிறப்பாகக் கற்றுப் பாடிவருவதுடன் பலருக்கு இலவசமாகப் பயிற்சி அளித்தும் வருகிறார். கர்நாடக இசைக்கச்சேரி ஹிந்துஸ்தான்

இசைக்கச்சேரி இவற்றை நிகழ்த்தும்போது அவற்றின் தனித்தன்மை சிறக்கப் பாடுவது பிரேமிளாவின் சிறப்பம்சம். இவரது இனிமை யான சாரீரம் இன்னொரு சிறப்பாகும்.

இவருக்கு தமிழ்மொழி, தெலுங்கு, மலை யாளம், ஹிந்தி ஆகிய மொழிகளில் நல்ல அறிவும் உண்டு. எனவே அம்மொழிப் பாடல்களைப் பாடும்போது தெளிவாகவும் அர்த்தபுஷ்டியுடனும் பாவத்தோடும் பாடு கின்றார். இது அம் மொழியைப் பேசுபவர் களைக்கூட ஆச்சரியப்படவைத்துள்ளது.

பல்வேறு இசைப் பேரறிஞர்களிடம் கல்லூரிகளிலும், கச்சேரிகளிலும், சபாக் களிலும், கல்விநிலையங்களிலும் இசைபயின்று முன்னுக்கு வந்த இளம் வித்வஷிகளுள் ஒரு வராகத் திகழ்கிறார் இவர். ஈழத்திலும், சிங்கப்பூரிலும் இசைநிகழ்ச்சிகள் செய்த பிரேமிளா, தமிழ் நாட்டிலும், கேரளம், ஆந்திரா, புதுடெல்லி முதலிய இடங்களி லும் கச்சேரிகள் செய்து பாராட்டுகளைப் பெற்றுள்ளார்.

தனது இனிய சாரீர வளத்துடன், கன நயம் கொடுத்து சபையோரையும் அறிந்து பாடும் திறமை இவருக்கு இருக்கின்றது. இன்றும் அவர் ஒரு இசைமாணவி. தென்ன கத்தின் தலைசிறந்த இசைவழியான தஞ்சா வூர்ப் பாணியைக் கிரகிக்கவேண்டி தஞ்சா வூர் T. M. தியாகராஜன் அவர்களிடம் பாடம் கேட்டுவருகிறார். அந்த முறையில் பாடியும் வருகின்றார்.

1970 ஆம் ஆண்டு சென்னைத் தமிழிசை மன்றத்தில் நடைபெற்ற தமிழிசை விழாவில் ராஜா சர் முத்தையாச் செட்டியார் முன்னி லையில் பாடிக்கொண்டிருந்தார்கள் பிரே மிளா. அவரது இசையிலும், தமிழ் உச்சரிப் பிலும் மிகவும் மகிழ்ந்த ராஜா சர் அவர்கள் "இன்னும் அரை மணி நேரம் கூட்டிக் கொடுங்கள் அவர் பாடுவதற்கு" என்று கொடுக்கப்பட்ட நேரத்தை நீடித்ததைப் பார்த்தேன்.

பதினெட்டு வருடங்களாக சென்னை வித்வத் சமாஜம், வித்வத் சபை, இந்திய நுண்கலைக் கழகம், கிருஷ்ண கான சபா K. R. சபா, தமிழிசைச் சங்கம் எனப் பல சபாக்களிலும் இசைக் கச்சேரிகள் நிகழ்த்திப் பரிசுகளும் பாராட்டுகளும் பெற்றுள்ளார். C. P. ஆர்ட்ஸ் கிளப், பாரதீய வித்யாபவன் போன்றவற்றில் இசைச் சொற்பொழிவு களில் பாடிச் சிறப்பிப்பதும் உண்டு.

கடந்த வருடம் இசைவிழாவின் போது சென்னை வித்வத் சபையில் அவர் ஹரிகதை பற்றி ஆற்றிய விளக்கவுரையைப் பலரும் பாராட்டினார்கள். ஹரிகதையின் சிறப்புக் களை - கதைமூலமாகவும் – பாடல்கள் மூல மாகவும் விளக்கஞ் செய்ததை வெகுவாக ரஸித்த ரஸிகர்கள் மிகுந்த கரகோஷம் செய்து பாராட்டினார்கள். கலாநிதி எம்பார் விஜயராகவாச்சாரியாரிடத்தும், கலைமா மணி பன்னிபாய் அவர்களிடமும் ஹரிகதை யைக் கற்று அறிந்தவர் இவர்.

வள்ளலார், காந்தி, பாரதியார் விழாக் களிற் கலந்துகொண்டு முத்தமிழ் வளரச் சிறப்புரைகள் ஆற்றியும் பாடியும் விளக்கப் பேச்சுக்கள்கொடுத்தும் வருகிறார் பிரேமிளா. திரு அருட்பாப் பாடல்களில் பெரிதும் ஈடு பாடு கொண்ட இவர் சமீபத்தில் வள்ளலா ரின் 'திருவடிப் புகழ்ச்சி'யை சங்கீதா நிறு வனத்தினர் மூலம் ஒலிப்பதிவு நாடாவாகப் பதிவு செய்து வெளியிட்டுள்ளார். இது தவிர A. V. M. நிறுவனத்தாரும் எட்டுப் பாடல்களை பிரேமிளாவைக்கொண்டு பாடச் செய்து வெளியிட்டுள்ளார்கள். இன்னும் தென்ஆபிரிக்காவின் நேதோல் தமிழ் வேத சபையினருக்காக 36 பாடல்கள் கொண்ட 3 இசை ஒலிப்பதிவு நாடாக்களைப் பதிவு செய்து கொடுத்துள்ளார்.

தனது அமுதகானத்தால் பலரையும் மகிழ வைக்கும் பிரேமிளாவைப் பற்றி சங்கீத கலாநிதி செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயர் குறிப்பிடும் பொழுது, "கர்நாடக சங்கீதத்தையும் இந்துஸ்தானி சங்கீதத்தை யும் ஒன்றோடொன்று கலக்காமல் வெகு சிறப்பாகத் திறமையுடன் பாடும் நல்ல பாடகி பிரேமிளா என்று 14-4-86ல் குறிப் பிட்டார்.

டாக்டர் பிரேமிளா அவர்களுக்குக் கடந்த 5-5-88 ஆம் தேதியன்று திருமணம் நடந்தது. இவரது கணவர், பிரபல இசை விற்பன்னரும், ஓவியருமான எஸ். ராஜம் அவர்களின் திருக்குமாரர் குருமூர்த்தி என்பவர் ஆவார்.

நல்லதொரு கலைக்குடும்பத்தைத் தேர்ந்தெடுத்த டாக்டர் பிரேமிளா அவர்கள் தமது மனம் கவர்ந்த கணவர் குருமூர்த்தியுடன் பல்லாண்டு கலைச்சேவை செய்து மேலும் மேலும் சிறக்க வேண்டும் என்றும் பிறந்த நாட்டிற்கும் புகுந்த நாட்டிற்கும் புகழைத் தேடித்தரவேண்டும் என்றும் இறைவனை வேண்டிப் பிரார்த்தித்து வாழ்க பல்லாண்டு என்று வாழ்த்துக் கூறுகிறது பல்லவி.

— நல்லைக்குமரன்

(திருமதி பிரேமிளா முன்னூர் இலங்கை வானொலி அறிவிப்பாளராயிருந்த திரு. எஸ். குஞ்சிதபாதம் தம்பதியினரின் புதல்வி யாவர்)

---

# ஸ்ருதி மாதா


அம்பிகை கொலுவீற்றிருக்கிறாள் ஒரு புறம் திருமகள் சாமரம் வீசுகின்றாள்' மறுபுறம் வீணையுடன் அமர்ந்திடுக்கிறாள் கலைவாணி. அம்பிகை கலைவாணியைப் பார்த்து வீணையை வாசிக்கச் சொல்கிறாள். கலைவாணி அமுதமெனப் பொழிகிறாள் இசையை. மெல்ல வரும் விரல்களினின்றும் எத்தனை நாதவர்ணங்கள். அந்த மதுரகான இசை எல்லோரையும் மயக்குகிறது. ஆகா–ஆகா என்று தேவலோக மாந்தர்கள் வியக்கின்றார்கள். ஒருகட்டத்தில் அன்னையும் அந்த இசையில் மயங்கி 'சபாஷ்' என்கிறாள்: மறுகணம் வீணை வாசிப்பதை நிறுத்திய கலைவாணிமயங்கிச்சாய்கிறாள். தேவமாதர்கள் நீர்தெளித்து விசிறுகின்றார்கள். சற்று நேரத்தில் கண் விழித்தெழுகிறாள் கலைவாணி ஏன்? என்ன நடந்தது என்று வினவுகிறாள் அம்பிகை. அதற்குக் கலைவாணி 'ஜெகன் மாதா' என் வாசிப்பை ரசித்து 'சபாஷ்' என்று சொல்லியபோது அந்தக் குரலின் இனிமையில் என்னை மறந்தேன். எனது கச்சபி வீணையில் பிறந்தது இசை தானா? என்று சந்தேகம் கொண்டேன். என் வீணை இசை எங்கோ மறைந்துவிட்டது. தங்கள் குரலில் எழுந்தநாதம் எங்கும் நிறைந்து விட்டது. ஆதனால் ஏற்பட்ட தடுமாற்றம் தான் எல்லாவற்றிற்கும் காரணம், என்னை மன்னித்து விடுங்கள் என்கிறாள். அன்னை கலைவாணியைத் தேற்றுகிறாள். அன்று அன்னை கூறிய சபாஷ் என்ற மொழி தான் ஸ்ருதி ஆயிற்று. அன்றுதான் இசையில் ஸ்ருதி பிறந்தது. ஆம்! சபாஷ் என்ற சொல்லின் எழுத்துக்களைக் கூர்ந்து கவனித்தால் சுருதி சேர்ப்பதற்கு நாம் உபயோகப் படுத்தும் ஸ - ப – ஸ் எனும் சங்கேதாட்சரங்களைக் காணலாம்.

ச – பா – ஷ் (ஸ – ப – ஸ்) அதனால்தான் 'ஸ்ருதி மாதா' என்ற பெயர் ஏற்பட்டது.

சொன்னவர்:

பூஜ்யஸ்ரீ ஹரிதாஸ்கிரி சுவாமிகள்

கேட்டவர்: நல்லைக்குமரன்


ராகம்


தானம்


பல்லவி

நன்றி, ஸ்ருதி

# சங்கீதத்தில் பாவம்

சங்கீத கலாநிதி
முடிகொண்டான் வெங்கட்ராம ஐயர்

மரம் செடி கொடிகளான தாவர வஸ்துக்களுக்கு உயிரில்லாவிடில் அவைகளின் ரூபங்கள் மாத்திரம் அப்படியே இருந்து இலைகளை உதிர்த்து கட்டைகளாயும் சுள்ளிகளாயும் காணப்படுகின்றன. அதேமாதிரி மானுடனுக்கு ஆவி போன பின் ரூபம் அப்படியே இருந்த போதிலும் உணர்ச்சியற்றும் அசைவற்றும் ஸகல தாதுக்களும் ஐம்புலன்களும் நசிவுற்று இருப்பது போல சங்கீதத்திலும் உயிர் நிலையாகிய பாவம் என்பது இல்லாவிடில் அந்த சங்கீதம் ச்ராவ்ய மில்லாமலும் உணர்ச்சி உண்டாக்காமலும் வெறும் வரட்டு சப்தமாகிவிடும். பாட்டில் பாவமேயில்லை என்று கூறுகிறோம். சிலரது பாட்டு பாவ புஷ்டியுடன் இருக்கிற தென்று சொல்லுகிறோம். தாரஸ்தாயியில் பாடும் போது கையை தலைக்குமேல் தூக்கினால் பாட்டு பாவத்துடன் இருப்பதாக நினைக்கக் கூடுமா? அல்லது பாட்டிற்குத் தக்கபடி அங்க சேஷ்டைகளையோ முகசேஷ்டைகளையோ செய்தால் பாவத்துடன் பாடுவதாகக் கருத முடியுமா? இல்லை. ஆடாமலும் அசங்காமலும் எவ்வித சேஷ்டைகளும் இல்லாமல் பாடவேண்டும் என்று கூறப்படவில்லை. சாதாரணமாக ஆண்கள் பாடும் போது சற்று கைகள், தலை இவைகளின் அசைவு இருப்பது இயல்புதான்.

பின், பாட்டில் பாவம் என்ன என்பதை ஆராய்ந்தறிய வேண்டும். பாவ புஷ்டி என்பது முதிர்ச்சியடைந்த பாட்டில் தான் இருக்கக்கூடும். இளம் பாட்டில் இருப்பது அரிது. இங்கு இளம் பாட்டு, முதிர்ந்த பாட்டு என்பது வயதைக்குறிக்காது அனுபவத்தையும் பழுத்த ஞானத்தையும் பாட்டின் உயர்தரத்தையுந்தான் குறிக்கும். ஐந்து வருஷம் பாடுவதற்குள் ஞானம் பழுத்து வருவதும் உண்டு. ஒருவர் ஐம்பது வருடம் பாடியும் ஞானம் முதிர்ச்சி அடையாமல் இருப்பதுமுண்டு. பாவமுள்ள பாட்டில் தான் அந்தந்த ராகங்களுக்குள்ள ரஸங்கள் தன்னாலேயே பிரகாசிக்கும். பாட்டில் நாதத்தின் மூல்யமாகத்தான் பாவத்தை உண்டு பண்ணவேண்டும். ஸங்கீதத்தில் நாத மூலம் பாவத்தை உண்டு பண்ணக் கூடியதாயிருப்பது ராகந்தான். இந்த ராகத்தில்தான் பாவமென்பது பூரணமாயிருக்கிறது. இது எந்த மொழியையும் மீறியது. முதலில் நாத ரூபமாயுள்ள ராகத்தில் பல த்வனி விமரிசைகளே நம்மைக் கவர்ந்து பிறகுதான் சாகித்யத்திலுள்ள பொருளையும் அநுபவிக்கிறோம். சங்கீதம் நன்றாய்க் கேட்கத் தெரியாதவர்கள்தான் முதலில் வார்த்தைகளைக் கேட்டு அதன் பொருளை அர்த்தம் செய்து கொள்ளுவார்கள். ஆகவே சங்கீதத்தை எந்தப் பாஷையிலும் பாடக் கூடுமென்றாகிறது. வாத்யம் மூலம் கேட்கும் சங்கீதத்தையும் சாகித்யம் தெரியாமலே கேட்டு அனுபவிக்கிறோம். புஷ்பமாகிற ராகத்தோடு நாராகிற வார்த்தைகளும் சேர்ந்து அந்த ராகத்தினால் ஏற்படும் உணர்ச்சியிலிருந்து வார்த்தைகளில் பொதிந்து கிடக்கும் தத்துவம் இன்னும் அதிகமாகப் பிரதி பலிக்கிறது.

நமக்குத் தெரிந்த, தெரியாத பாஷைகளில் உள்ள கிருதிகள் எல்லாவற்றையுந்தான் கேட்டு அனுபவிக்கிறோம். இது அதிலுள்ள சங்கீத உயர்வினாலேயே ஒழிய வாக்கியங்களின் உயர்வினால் மாத்திரமல்ல, ஒருவர் ஒரு உயர்ந்த ஸாஹித்யத்தை மட்டரகமாயுள்ள ஸங்கீதத்தினால் பாடினால் அது நல்ல சங்கீத மாகாததோடு அப்போது பாஷையை மாத்திரந்தான் கவனிக்கக் கூடும். சங்கீத மென்பது சர்வபாஷைகளுக்கும் பொதுவானது. பாஷையைப்பொறுத்து சங்கீதமில்லை பாஷைகளுக்காக சங்கீதம் வித்தியாசப்படாது அதன் சாஸ்த்ரம் வேறுபடாது. பாஷையென்பது ஒருவர்க்கொருவர் உள்ள அபிப்பிராயங்களைத் தெரிவித்துக் கொள்ளும் மார்க்கத்திற்கானது. சங்கீதமோ உணர்ச்சிகளை எழுப்பி நவரஸங்களை அனுபவிக்கச் செய்கின்ற நாதமயமாகும். ஆக, சங்கீதத்தில் பாவத்திற்கு ஸாகித்யம் முக்கியமில்லை என்றாகிறது. ஆனால் சிறந்த அர்

த்த புஷ்டியுள்ள ஸாகித்யமும் பாவத்தோடு கூடின சங்கீதமும் சேர்ந்தால் அந்த பாவ மானது ஒன்றுக்கு மூன்று பங்காய் விருத்தி யடையும்.

பாவமுள்ள பாட்டில்தான் பாடுகிற வர்களுடையவும் கேட்பவர்களுடையவும் ஆத்மா ஆனந்தமடையும். இதை உணர்ச்சி யுள்ள சங்கீதம் எனலாம். சில சங்கீதம் செவிக்கின்பத்தைக் கொடுக்கும். சில சங்கீ தம் கலையின் மேன்மையைக் காட்டும் சில புத்திக்கு அதிக வேலையைக் கொடுக்கும். சில பக்தி ரஸத்தை மாத்திரம் உண்டாக் கும். இவைகள் எல்லாம் நல்ல சங்கீத மேயாயினும் இவைகளோடு அந்தராத் மாவைச் சற்று நேரமாவது ஆநந்தமயத் தில் இருக்கச்செய்யும் சங்கீதமே பாவத் தோடு கூடிய உயர்ந்த சங்கீதமாகும். நாதோபாஸனை செய்கிற காயகரிடத்தில் சங்கீதமானது மனதில் ஊறி ஊறி ஞானம் முற்றிப்பழுத்து ஆத்மார்த்தத்தை முன் னிட்டுப் பாடுகிற வித்வானுடைய கானத் தில் பாவம் ததும்பிக் கேட்பவர்களைப் பர வசப்படுத்தும். இந்த நிலை உண்டாவதற்கு நீடித்த அனுபவம் வேண்டும். பாவபுஷ்டி யோடு பாடும் சமயங்களில் ஸபாஷ் என் றோ நல்லது என்றோ சொல்லத்தோன்றாத தோடு கைதட்டவும் தோன்றாது. பாடுகிற வர் தன்னை மறந்து பாடுவதனால் கேட்ப வரும் பாடுகிறவர் வசமாகி பாடுகிறவர் கேட்பவர் இருவர் மனதும் ஒன்றாகி இரு வரும் ஸமாதி நிலையை அடையும் தருண மாக இருக்கும். இந் நிலையை உயர்ந்த ஞானமுள்ள அனுபவத்தோடு கூடிய சில வித்வான்கள் பாடும் போது சிற் சில சமயங்களில் அடைவதுண்டு.

பாவம் என்பது கானத்தில் ஜீவன் இருப்பதாகவும் அந்த ஜீவன் கேட்பவர் களுக்கும் ஜீவனைக் கொடுப்பதாயும் கொள்ள வேண்டும். இதைக் கொண்டுதான் பிராணி களும் சிசுக்களும் சங்கீதத்துக்கு வசப்படுகிற தென்றும் வியாதிகளை சங்கீதத்தினால் குணப் படுத்தலாமென்றும் சொல்லப்பட்டிருக் கிறது.

Courtesy: the Journal of the Music Academy, Madras, 1953.

## புளியோதரை

மூன்று சகோதரர்கள் நுண்கலைகளின் வெவ்வேறு துறைகளில் மிகவும் பிரபல்யம் அடைந்திருப்பது அபூர்வமாகும். கொல்லத் தூரைச் சேர்ந்த ராமானுஜாச்சாரியாரின் மூன்று புத்திரர்களாகிய வரதாச்சாரியார், கிருஷ்ணமாச்சாரி, ஸ்ரீநிவாச ஐயங்கார் ஆகியோரில் முன்னவரே வாய்ப்பாட்டில் சிறந்து விளங்கிய டைகர் வரதாச்சாரியார் ஆவார். கிருஷ்ணமாச்சாரி சிறந்த வைணீக வித்வான். ஸ்ரீநிவாச ஐயங்கார் ஒரு நாட் டிய சாஸ்திர மேதை.

கிருஷ்ணமாச்சாரி பழைய, அபூர்வ கிருதிகளையும் பதம், ஜாவளி முதலியவற் றையும் நன்கு வாசிப்பதில் பெயர் பெற்ற வர். அத்துடன் ஒரு வாக்கேயகாரருமாவார். "பத்ம புரிவரத" என்பது அவரது முத் திரை.

அவர் ஒரு சுயம்பாகி, அதாவது தானா கவே சமைத்து உண்பவர். செல்லும் தலங் களிலெல்லாம் தானே பிரசாதம் தயாரித்து வழங்குவதுண்டு. ஒருநாள் திருவல்லிக்கேணி யில் பார்த்தசாரதி கோயிலில் இவர் செய்த புளியோதரையை அடியார்கள் நன்கு ரசித்து உண்டனர். அன்று மாலை அங்கு அவரது கச்சேரி நடந்தது. அப் போது அங்கிருந்த ரசிகர்கள் காலையில் தாம் ரசித்த புளியோதரையை நினைவு கூர்ந்து அவரைப் "புளியோதரை கிருஷ்ண மாச்சாரி" என்று அன்புடன் அழைத்தனர். இப்பெயர் இவர் இறக்கும் வரை வழக்கில் இருந்து வந்தது.

— டாக்டர் ஆருத்ரா

நன்றி: ஸ்ருதி, ஐப்பசி 1986

# இந்திய சங்கீத நூல்கள்

''கானப்ரியா''
S. N. நடராஜய்ய

இந்திய சங்கீத இலக்கியங்கள் தொடர்பாக ஆய்வு ஒன்று நடத்தப்பட்டால், இசை, நடன, நாடகத்துறை மிகவும் உன்னதமான நிலையில் இருந்து வந்திருப்பதை ஆதாரபூர்வமாக உணரலாம். சங்கீதம், மிடற்றிசை ( Vocal Music ), கருவியிசை (Instrumental Music), ஆடல் (Dance including gesticulation) என்ற மூன்றையும் சேர்த்துக் குறிக்கும். இதுவே ''தௌர்யத்ரிகம்'', அதாவது '' துரீய '' நிலைக்கு மனிதனை கொண்டு செல்லக்கூடியது எனக் கூறப்படும்.

இம் மூன்று துறைகளிலும் இந்தியாவில் பழம் பெருமையுடைய நூல்கள் மிகுதியாக உள்ளன. உலக இலக்கியங்களில் மிகவும் புராதனமானதாக உள்ள வேதங்களே இசை இலக்கியங்களாக உள்ளது நாம் அறிந்ததே. இதிகாசத்தில் முதன்மையான '' இராமாயணம் குசலவர்களால் இசையுடன் ஓதப்பட்டதாக வரலாறு உண்டு. சங்க இலக்கியங்களில் பரிபாடல் இசையமைக்கப்பட்ட இசைப்பாடல் வகையாகும். காரைக்காலம்மையார் பதிகங்கள், மூவர் தேவாரங்கள், ஆழ்வார்களின் பாசுரங்கள் என்பன முதலில் இசைப்பாடல்களே. பக்தி இலக்கியங்கள் இசையுடனேயே பாடப்பட்டன என்பது பெரும்பாலும் உண்மையே.

சங்கீத சாஸ்திரத்தை விளக்கும் இலக்கண நூல்களும் ஏராளமாகக் காலப்போக்கில் எழுதப்பட்டு வந்துள்ளன. அக்னி புராணம், விஷ்ணு தர்மோத்தர புராணம், வாயு புராணம், மார்க்கண்டேய புராணம், யாமளாஷ்டக தந்திரம் இவற்றிலெல்லாம் ஒருசில அத்தியாயங்கள் சங்கீதத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

சங்கீத நூல்கள் பொதுவாக இருவகைப் படும்.

1. அறிமுறை நோக்காக உடைய சாஸ்திர நூல்கள்
2. செய்முறை நோக்காக உடைய இசையமைக்கப்பட்ட பாடல்கள்

அறிமுறை நூல்களில் மிகுதியானவை ஸம்ஸ்கிருத மொழியிலேயே எழுதப்பட்டன. அடுத்தபடியாக தமிழ் மொழியில்தான் நூல்கள் அதிகமெனக் கூறப்படுகின்றது இவற்றில் பல மறைந்து விட்டாலும் பிற்கால நூல்களின் மூலம் இவைபற்றி அறியமுடிகின்றது. செய்முறை நூல்களிலும் இதே நிலைதான் காணப்படுகின்றது.

சங்கீத நூல்களில் சிறியனவும். பெரியனவும், விரிவானவைகளும், சுருக்கமானவைகளும் உள்ளன. சில நூல்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை. சிலவற்றுக்கு ஆசிரியர் பெயர் அல்லது அவை எழுதப்பட்ட காலம் இவை தெரியாமல் உள்ளன.

சில சாஸ்திர நூல்கள், செய்முறை நூல்கள், இவற்றிற்கு உரை நூல்களும் எழுதப்பட்டுள்ளன. இந்நூல்களில் பெரும்பாலானவை அச்சேறாத நிலையில் பல நூல் நிலையங்களில் கையெழுத்துப் பிரதிகளாகவே உள்ளன எனத் தெரிகிறது.

சங்கீத சாஸ்திர நூல்களில் சம்ஸ்கிருதத்திலமைந்தவை ஓரளவு கால ஒழுங்கின்படி அமைத்து இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமான சில உரை நூல்களும் தரப்பட்டுள்ளன. சில நூல்கள் நந்திகேசுவரர், சுக்கிரன், நாரதர், சதாசிவர், பிரமா என்பவர்களால் அருளப்பட்டவை எனப்படுகின்றன. எனவே அவைகளில் முக்கியமானவை இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

19 ஆம் நூற்றுண்டுக்குப்பின் எழுதப்பட்டவை இங்கு சேர்க்கப்படவில்லை.

| நூல் | இயற்றியவர் | காலம் |
|---|---|---|
| 1. நாட்டிய வேதாகமம் (துவாதச சஹஸ்ரீ) | விருத்தபரதர் | கி. மு. 5ஆம் நூற்றாண்டு |
| 2. நாட்டிய சாஸ்திரம் (ஷட்ஸாஹஸ்ரீ) | பரதமுனி | கி. மு. 5ஆம் நூற்றாண்டு |
| 3. கோஹலீயம் | கோஹலர் | ,, ,, ,, |
| 4. தட்டிலம் | தட்டிலர் | ,, ,, ,, |
| 5. பிருஹத்தேசி | மதங்கர் | ,, ,, ,, |
| 6. ஸங்கீத மகரந்தம் | நாரதர் | கி. பி. 11ஆம் நூற்றாண்டு |
| 7. ஔமாபதம் | உமாபதி சிவாச்சாரியார் | ,, ,, ,, |
| 8. ஆனந்தஸஞ்ஜீவனம் | மதனபாலர் | கி. பி. 12ஆம் நூற்றாண்டு |
| 9. நாட்டியசேகரம் | வீரபட்டதேசிகர் | கி. பி. 1160ஆம் ஆண்டு |
| 10. மானஸோல்லாசம் | ஸோமேஸ்வரர் (பூலோகமல்லர்) | கி. பி. 12ஆம் நூற்றாண்டு |
| 11. சங்கீதரத்னவளி | ஸோமராஜதேவர் | ,, ,, ,, |
| 12. சங்கீதரத்னகரம் | சாரங்கதேவர் | ,, ,, ,, |
| 13. சங்கீதசூடாமணி | ஜகதேகமல்லர் | ,, ,, ,, |
| 14. நிருத்தரத்னவளி | ஜெயஸேனபதி | கி. பி. 1254ஆம் ஆண்டு |
| 15. சங்கீத சமயசாரம் | பார்சுவதேவர் | கி. பி. 13ஆம் நூற்றாண்டு |
| 16. சங்கீதசுதாகரம் | ஹரிபாலர் | ,, 14 ,, ,, |
| 17. சங்கீத சிருங்காரஹாரம் | ஹம்மீரர் | ,, ,, ,, |
| 18. மதங்கபரதம் | லக்ஷ்மணபாஸ்கரர் | ,, ,, ,, |
| 19. சங்கீதோபநிஷத் | சுதாகலசர் | ,, ,, ,, |
| 20. நாட்டிய லோசனம் | திரிலோசனத்தியர் | ,, ,, ,, |
| 21. ஸ்வரராக சுதாரசம் (நாட்டிய சூடாமணி) | ஸோமனர்யா | ,, ,, ,, |
| 22. சங்கீத ஸாரம் | ஸ்ரீவித்யாரண்யர் | கி. பி. 15ஆம் நூற்றாண்டு |
| 23. லக்ஷணதீபிகை | சௌரனர்யா | ,, ,, ,, |
| 24. தாளதீபிகை | கோபேந்திரதிப்பபூபாலர் | ,, ,, ,, |
| 25. சங்கீதமுக்தாவளி | தேவனபட்டர் | ,, ,, ,, |
| 26. சங்கீதகிரமதீபிகை | கும்பகர்ணர் | ,, ,, ,, |
| 27. சங்கீத ராஜ (சங்கீத மீமாம்சை) | கும்பகர்ணர் | ,, ,, ,, |
| 28. சங்கீத சர்வஸ்வம் | ஜகத்தரர் | ,, ,, ,, |
| 29. சங்கீத முக்தாவளி | தேவேந்திரர் | ,, ,, ,, |

| | நூல் | இயற்றியவர் | காலம் |
|---|---|---|---|
| 30 | ஸ்வரமேள கலாநிதி | ராமாமாத்தியர் | கி. பி. 16ஆம் நூற்றுண்டு |
| 31. | சங்கீத சந்திர | அபிலாஷர் | ,, ,, ,, |
| 32. | ராகமாலை | க்ஷேமகர்ணர் | கி. பி. 1570 |
| 33. | ராகதாளபாரிஜாதப்ரகாசம் | கோவிந்தர் | கி. பி. 16ஆம் நூற்றுண்டு |
| 34. | சங்கீத சூர்யோதயம் | லட்சுமிநாராயணர் | ,, ,, ,, |
| 35. | பரதசாஸ்திரக்கிரந்தம் | லட்சுமீதரர் | ,, ,, ,, |
| 36. | சங்கீத சூடாமணி | பிரதாபர் | ,, ,, ,, |
| 37. | சங்கீத தாமோதரம் | சுபங்கரர் | ,, ,, ,, |
| 38. | ராகதரங்கிணி | லோசனகவி | ,, ,, ,, |
| 39. | சத்ராகசந்திரோதயம் | புண்டரிக விட்டலர் | கி. பி. 17ஆம் நூற்றுண்டு |
| 40. | ராகமாலா | ,, | ,, ,, ,, |
| 41. | ராகமஞ்சரி | ,, | ,, ,, ,, |
| 42. | நர்த்தன நிர்ணயம் | ,, | ,, ,, ,, |
| 43. | ராகநாராயணம் | ,, | ,, ,, ,, |
| 44. | சங்கீதவிருத்தரத்ஞகரம் | ,, | ,, ,, ,, |
| 45. | ஹ்ருதயப்ரகாசம் | ஹ்ருதயநாராயணர் | ,, ,, ,, |
| 46. | ஹ்ருதய கௌதுகம் | ,, | ,, ,, ,, |
| 47. | இராகவிபோதம் | ஸோமநாதர் | கி. பி. 1609 ஆம் ஆண்டு |
| 48. | சங்கீததர்ப்பணம் | சதுரதாமோதரர் (ஹரிபட்டர்) | கி. பி. 17ஆம் நூற்றுண்டு |
| 49. | சங்கீதஸாரோத்தரம் | ,, | ,, ,, ,, |
| 50. | சங்கீத கலாநிதி | ,, | ,, ,, ,, |
| 51. | சதுர்தண்டிப்ரகாசிகை | வேங்கடமஹி | ,, ,, ,, |
| 52. | சங்கீத புஷ்பாஞ்ஜலி | வேதர் | ,, ,, ,, |
| 53. | சங்கீத மகரந்தம் | ,, | ,, ,, ,, |
| 54. | பரதசார சங்கிரகம் | சிக்கதேவராயர் | ,, ,, ,, |
| 55. | சங்கீதசுதா | ரகுநாதநாயக்கர் | ,, ,, ,, |
| 56. | ரஸகௌமுதி | ஸ்ரீகண்டர் | ,, ,, ,, |
| 57. | நிருத்யாத்யாயம் | — | ,, ,, ,, |
| 58. | சங்கீதசாரசங்கிரகம் | ஜெகஜ்ஜோதிமல்லர் | ,, ,, ,, |
| 59. | ஸ்வரோதயதீபிகை | ,, | ,, ,, ,, |
| 60. | சங்கீத பாரிஜாதம் | அகோபிலர் | ,, ,, ,, |
| 61. | சங்கீதசந்திரிகை | மாதவபட்டர் | ,, ,, ,, |

| நூல் | | இயற்றியவர் | காலம் | | |
|---|---|---|---|---|---|
| 62. | அநூபசங்கீத விலாசம் | பாவபட்டர் | ,, | ,, | ,, |
| 63 | அநூப சங்கீத ரத்னாகரம் | ,, | ,, | ,, | ,, |
| 64. | அநூபசங்கீதாங்குசம் | ,, | ,, | ,, | ,, |
| 65. | சங்கீத விநோதம் | ,, | ,, | ,, | ,, |
| 66. | முரளீப்பிரகாசம் | ,, | ,, | ,, | ,, |
| 67. | நாடக பரிபாஷா | ஸ்ரீரங்கராஜர் | கி. பி. 18ஆம் நூற்றாண்டு | | |
| 68. | மேளாதிகாரலக்ஷணம் | | ,, | ,, | ,, |
| 69. | பாலராமபரதம் | ஸ்ரீபாலராமவர்மா | ,, | ,, | ,, |
| 70. | சாஹித்யகல்லோலினி | பாஸ்கராசாரியர் | ,, | ,, | ,, |
| 71. | சங்கீத சாராம்ருதம் | ஸ்ரீதுளஜாராஜா | ,, | ,, | ,, |
| 72. | சங்கீதநாராயணம் | கஜபதிவீர ஸ்ரீ நாராயணதேவர் | ,, | ,, | ,, |
| 73. | சங்கிரஹசூடாமணி (சங்கீதசாஸ்த்ர சங்கிரகம்) | ரேவிந்தாசார்யர் | ,, | ,, | ,, |
| 74. | சங்கீதகல்பத்ருமம் | கிருஷ்ணானந்தர் | கி. பி. 19ஆம் நூற்றாண்டு | | |
| 75. | அர்ஜுனமதஸாரம் | வேங்கடாசார்யா | ,, | ,, | ,, |
| 76. | அர்ஜுனபரதம் | நாகார்ஜுனர் | ,, | ,, | ,, |

## உரை நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அபிநவபாரதி | அபிநவகுப்தர் | நாட்டிய சாத்திரத்திற்குரியது |
| 2. | ஹர்ஷவார்த்திகம் | ஹர்ஷர் | ,, ,, |
| 3. | சங்கீத சுதாகரம் | சிம்மபூபாலர் | சங்கீதரத்னாகரத்திற்குரியது |
| 4. | கலாநிதி | கல்லிநாதர் | ,, |

## தெய்வத் தொடர்புடையவை

| | | | |
|---|---|---|---|
| 1. | சதாசிவ பரதம் | சதாசிவர் | இவற்றின் காலம் நிர்ணயிக்கமுடியாதது. |
| 2. | பிரம்மபரதம் | பிரம்மா | |
| 3. | நந்திகேசுவரபரதம் | நந்திகேஸ்வரர் | |
| 4. | நந்திகேசுவர சம்ஹிதை | ,, | |
| 5. | பரதார்ணவம் | ,, | |
| 6. | அபிநயதர்ப்பணம் | ,, | |
| 7. | ஆஞ்சநேயபரதம் | ஆஞ்சனேயர் | |
| 9. | அர்ஜுனபரதம் | அர்ஜுனன் | |

# மிருதங்கம்
## வரலாற்றுத் தத்துவம்

A.N. சோமாஸ்கந்த சர்மா
மிருதங்க விரிவுரையாளர்
நுண்கலைப்பிரிவு
யாழ்பல்கலைக்கழகம்

வரலாற்றுக் கருவிகளுள் வீணை, வேணு, மிருதங்கம் என்பவை அதி முக்கியத்துவம் வாய்ந்த கருவிகளாகும். மிருதங்கம் என்னும் தேவ வாத்தியமானது உலகம் தோன்றிய காலத்திலிருந்தே பல்வேறு நாமங்களுடனும் தோற்ற அமைப்புக்களுடனும் இசை உலகுடன் மக்களை இசைவுபடுத்தும் தந்தை ஆகவும் தாயாகவும் பங்களித்து வருகின்றது. இது மத்தளம், முட்டு, நந்தி வாத்தியம், தண்ணுமை, மிருதங்கம், ஆனந்த வாத்தியம் போன்ற காரணப் பெயர்களைப் பெற்று அழைக்கப்பட்டு வந்தது. சங்கீதத்தில் நாதமானது ஓங்கார வடிவமானது. ஓங்காரம் என்பது வட்ட வடிவமுடையது. அது போலவே மிருதங்கத்தில் வலந்தரை, இடந்தரைத் தோற்றங்களும் வட்டவடிவமாக அமைந்துள்ளன.

இவ்வாத்தியத்தினை நடராஜப் பெருமானின் ஆனந்தத் தாண்டவங்களின் போது நந்தியந் தேவர், விஷ்ணு, உமாதேவியார் வாசித்ததாக ஓர் ஐதீகம். இவ் வாத்தியம் ஓர் சக்தி வாத்தியமாகும். இதில் மூன்று விதமான தேவர்கள், தேவியர்கள், மூன்று விதமான சக்திகள் என்பன ஒன்றுசேர்ந்து அதாவது ம-த-ள என்பன சேர்ந்து மதள என்ற பெயர் பெற்று அழகிய ஓசை வடிவிற்காக மத்தளம் என்று பெயர் உண்டானது. அதாவது "ம" என்பது பரமேஸ்வரன் ஆகாயம் சக்தி தேவியையும் "த" என்பது விஷ்ணு பூமி லக்ஷ்மியையும் "ள" என்பது பிரம்மா நீர் சரஸ்வதி தேவியையும் குறிப்பிடுகின்றது. இவற்றைவிட சகலவித இசைகளுக்கும் தளம் போன்று லய நிர்ணய விடயங்களில் துணை புரிவதனால் மத்து என்பது இசை, தளம் என்பது தரை என்று பொருள்படும். மத்து + தளம் = மத்தளம் எனப் பெயர் பெற்றது. அத்துடன் தனது ஒரு பாகத்தில் மிருத்து என்று அழைக்கப்படும் மண்ணினால் ஆன கலவையைக் கொண்டு அமைக்கப்பட்டிருப்பதால் மிருத்து + அங்கம் = மிருத்தங்கம் என்றும் காலப் போக்கில் ஓசை அழகில் மிருதங்கம் எனவும் அழைக்கப்பட்டது. இதைவிட இதனுடைய அழகுத் தோற்றமானது மிருதுவானதாக அமைந்திருப்பதனாலும் மிருது + அங்கம் மிருதங்கம் எனவும் பெயர் வந்தது. மேலும் இவ் வாத்தியமானது இரு கைகளாலும் அடித்து வாசிக்கப்படுவதால் அடித்தல் என்பது மத்தளம் என்னும் பொருளுடையதாலும் மர்த்தளம் என்பது மத்தளமாகப் பெயர் பெற்றது. உமாதேவியரால் தண்ணுமையான நாதம் உண்டாகும்படி வாசிப்பதாலும் தண்ணுமை என்னும் பெயரும் உண்டானது. நாட்டியக் கச்சேரிகளில் முக்கியமானது நட்டுவாங்கம் மிருதங்கம் என்பனவாகும் இவற்றில் நட்டுவாங்கம் என்பது முதலில் தட்டு எனவும் மிருதங்கம் என்பது துணையாக இருப்பதால் முட்டு எனவும் அழைக்கப்பட்டது. இதற்கு சார்பாக நட்டு வாங்கம் செய்பவர் தட்டுக்காரன் என்றும் மிருதங்கம் வாசிப்பவர் முட்டுக்காரன் என்றும் அழைக்கப்பட்டனர். இதன் காரணமாக இக்கலைஞர்கள் வாழ்ந்து வந்த தெருக்கள் இன்றும் தஞ்சையில் தட்டுக்காரன் தெரு முட்டுக்காரன் தெரு என்றும் அழைக்கப்படுகின்றன.

### வாத்திய அமைப்பு

உலகமானது மக்களுடனும், ஜீவராசிகளுடனும் தேவர்களாலும் நவக்கிரக தேவர்களாலும் இயக்கப்படுகின்றதோ அதே போன்று தான் மிருதங்கமும் உலகியலில் தொடர்புபடுகிறது. அதாவது மிருதங்கமானது உலகத்தினை பிரமா, விஷ்ணு, பரமேஸ்வரன் ஆகியோரின் படைத்தல், காத்தல், அருளல் போன்ற முத்தொழில்களை உலகிற்கு ஆற்றுதல் போலவே முறையே மிருதங்கத்திலும் வாசஞ்செய்கின்றனர். இதனால் மிருதங்கம் திரிமூர்த்தி சொரூபம் எனவும் அழைக்கப்படுகிறது.

அத்துடன் மிருதங்கத்தை மூன்று பிரிவு களாகப்பிரிக்கலாம் ஒதில் மரத்திஞலாய பகுதி கட்டை எனப்படும் உடற் பகுதி யாகும். மற்றும் இரு பக்கங்களும் வலந் தரை, இடந்தரை என்ற பகுதிகள், இம் மூன்றினையும் ஒன்று சேர்த்து இணைப்பது வார். இது தான் சக்தியாகும். உலகிற்கு சக்தியானது எத்தனை அவசியமோ அதே போல் மிருதங்க நாத இசையினை இயங்கச் செய்வது சக்தியே ஆகும். சக்தியானவள் பதினறு கலைகளைக் கொண்டவள் அதே அடிப்படைத் தத்துவத்திலேயே வலந்தரை, இடந்தரை பாகத்தினை இணைப்பதற்கு பதினறு கண்களில் வார் இணைக்கப்படு கிறது. வலந்தரைப் பக்கம், சிவபாகம் சூரியன். இடந்தரைப்பக்கம் சந்திரன் மதிபாகம் எனக் கொள்ளப்படுகிறது. சூரியன் உஷ்ணம் பொருந்தியவன். அதே போலவே வலந்தரைப் பகுதிக்கும் உஷ்ணம் தான் அவசியமானதாகும். அதே போன்று சந்திரன் தண்மை பொருந்தியது. எனவே சந்திரன் உள்ள இடந்தரைப் பகுதிக்கு எப்பொழுதும் தண்ணீர் அவசியமாகிறது. இதே போன்று இவ்வாத்தியம் வலந்தரைப் பகுதி சூட்டினுலும், இடந்தரைப்பகுதி குளி ரினுலும் சமச்சீர் செய்யப்பட்டு ஒலியும் சமச்சீர் படுத்தப்படுகிறது. இதைவிட சூரிய சந்திரர்களை ராகு கேதுக்கள் எப்படிப் பற்றிச் சூழ்ந்துள்ளளார்களோ அதே அடிப் படையிலேயே வலந்தரை, இடந்தரைப் பகுதிகளில் சாட்டை வார்கள் ராகு கேது வாக இரட்டைவார்களாக இணைத்துப் பின்னப்பட்டுள்ளது.

ஒரு குழந்தையானது பிறந்தவுடன் அம்மா என எப்படி முதலில் வார்த்தை கூறுகிறதோ அதே போல சக்தி பாகமான இடந்தரையில் "தா" என்னும் சொல் முதலில் வாசிக்கப்படுகிறது.

மிருதங்கத்தில் வாசிக்கப்படும் சொற் கள் சங்கீதத்தில் ஆரம்பஸ்வரங்கள் "ஸ ரி க ம பத நி" என்னும் ஏழைப் போன்றே த, தி, தொம், நம், தின், ட, ஸா (சாபு) என்னும் ஏழு சொற்களும் ஆரம்ப சொற் களாகும். இவற்றின் சேர்க்கையிஞலேயே சொற்கட்டுகள், ஜதிகள், கோர்வைகள், டேகாக்கள் உண்டாக்கப்படுகின்றன.

## உபயோகம்

மிருதங்கம் என்னும் கருவியானது எமது சடங்குகளிலும் கோவிற் கிரியை களிலும் இசை அரங்குகளிலும் முக்கிய பங்கு கொண்டு உலகின் பண்பாட்டிற்கு துணைபுரிகிறது.

அதாவது மதச் சடங்குகளில் இசை நிகழ்ச்சி, நாட்டிய நிகழ்ச்சிகள், பண்ணிசை நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடாத்து வதற்கு உறுதுணையாக அமைகிறது. இதையே சம்பந்த ஸ்வாமிகள் "முழவம் பண்ணுகவே ஆடுமாறு வல்லான்" என்பார். கோவிற் கிரியைகளில், விழாக்கிரியைகளில் சொல்லப்பட்ட நிருத்யம் தாளம் என் பவற்றை நெறிப்படுத்தத் துணைபுரிகிறது. அத்துடன் கொடியேற்ற வைபவத்தில் தம்ப பூஜையின் போது நந்திகேஸ்வரருக் குப் பிரிய மானதாகவும் நந்திகேஸ்வரர் வாசிக்கும் வாத்தியம் என்ற காரணத் திஞலும் வாசிக்கப்படுகிறது.

கணபதி தாளம் விருஷபதாளம் போன்ற ஜதியினை வாசிக்கவும் மிருதங்கம் உபயோகிக்கப்படுகிறது. ஆலயங்களில் பஜனைக் கச்சேரிகளிலும் மிருதங்கம் காலப் பரிமாண நிர்ணயம் செய்யவும் பயன்படுத் தப்படுகிறது.

இவ்வாத்யமானது சாஸ்திர அடிப்ப டையால் ஆக்கப்பட்டும் பண்டு தொட் டும் கோவில்களில் வாசிக்கப்பட்டும் நாட் டிய அரங்குகளிலும் கதைகளிலும் வாசிக் கப்பட்டு வருங்காலத்தில் 18ம் நூற்ருண்டில் வாழ்ந்து இதனை வாசித்து வந்த ஸ்ரீ நார யணசாமி அப்பா என்னும் மகான் மூலம் மிருதங்கம் சங்கீத உலகில் புத்தொளி ஊட் டப்பட்டும் ஒரு முக்கிய வாத்தியக்கருவியா கவும் இடம பெற்றுவருகிறது. அடுத்து 20ம் நூற்ருண்டில் பழனி சுப்பிரமணியபிள்ளை பாலக்காடு மணிஐயர் காலத்தில் மிருதங்க மானது தனக்கென ஓர் இடத்தை வகிக்கும் தகைமை பெற்றது. இப்போதுபாரதத்திலும் ஈழத்திலும் மிருதங்க வாத்திய சங்கீதமா னது நன்கு விருத்தியடைந்தும் [illegible] மேலும் [illegible] நதும் இசையுலகில் முதுகெலும்பு

போன்று பங்காற்றி வருகின்றது. அதுமட்டு மன்றி கல்விக்கூடங்கள் பல்கலைக் கழகங்கள் போன்றவற்றில் தனித்துறையாகவும் உல கெங்கும் நடாத்தப்பட்டும் வருகிறது.

இவை யாவும் மிருதங்க வாத்தியத்தி னுடைய நாதசக்தி தேவியின் சக்தியே காரணம் என்பது உண்மையாகும். இதையே வேதம் வீணு, வேணு, மிருதங்கராஸிகா என்று தேவிமகாத்மியத்தில் கூறும்.

**உசாத்துணை நூல்கள்**

1. சம்பந்தர் தமிழ்
2. சாமவேத சாரம்
3. மிருதங்க சங்கீத சாஸ்திரம்
4. மிருதங்கம் சுருக்க விளக்கம்
5. சைவாலயக் கிரியைகள்.

---

## நல்லை ஆதீனமும் "பல்லவி" நிர்வாகமும் உதயன் - சஞ்சீவி ஆதரவில் நடாத்தும்

# 'தம்புரா'' இசைப்போட்டி 1988 - 1989

**விதிகள்**

1. "தம்புரா,, இசைப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் யாழ்ப்பாணப்பல்கலைக் கழக இசை டிப்ளோமா அல்லது வட இலங்கைச் சங்கீத சபையால் நடத்தப்ப டும் ஆசிரியர் தராதரப்பத்திரம் (6ம் தரம்) பெற்றிருக்க வேண்டும்.
2. போட்டியிற் கலந்து கொள்பவர்கள் 1-11-1988 அன்று 30 வயதுக்கு மேற்ப டாதவர்களாயிருத்தல் வேண்டும்.
3. 1988 கார்த்திகை மாதம் நடக்கும் முதல் தெரிவில் பதின்மர் தெரியப்படுவர். அவர்களுள் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்கள் 1989 தைமாதமளவில் தெரிவு செய்யப்படுவர். நடுவர் தீர்ப்பே இறுதியானது.
4. விண்ணப்ப முடிவுத்திகதி 30.09.1988
5. போட்டியிற் கலந்து கொள்பவர்கள் பின்வரும் ராகங்களில் ஒவ்வொன்றிலும் ஆலாபனை, கீர்த்தனை, நிரவல், கற்பனுஸ்வரம் முதலியன பாடவேண்டும்.

| | | |
|---|---|---|
| தோடி | பந்துவராளி | சாவேரி |
| கரகரப்பிரியா | ஷண்முகப்பிரியா | மோகனம் |
| ஹரிகாம்போதி | சிம்மேந்திரமத்திமம் | ஆரபி |
| சங்கராபரணம் | கல்யாணி | பிலகரி |
| கீரவாணி | லதாங்கி | பேகட |
| பைரவி | காம்போதி | வசந்தா |
| ஸ்ரீரஞ்சனி | பூர்விகல்யாணி | |

6. பின்வரும் முகவரிகளிலே விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லை ஆதீனம்
நல்லூர்.

பல்லவி அலுவலகம்
167, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

S. குணராஜா, K. நாகேஸ்வரன் M.A
போட்டி அமைப்பாளர்கள்

# ★ கலைப்புதிர் ★

1. இரு பெயர்களைக் கொண்ட ஐந்து ராகங்களையும் அவற்றின் மறு பெயர்களையும் கூறுக.

2. முதலாம் கலத்திலுள்ள ஒரு கர்நாடக ராகமும் இரண்டாம் கலத்திலுள்ள ஒரு ஹிந்துஸ்தான் ராகமும் ஒரே ஸ்வரங்களையுடையவை. அவற்றை இணைக்கவும்.

| | |
|---|---|
| சங்கராபரணம் | நட்பைரவ் |
| சுபபந்துவராளி | யமன் |
| மாயா மாளவகௌளை | பிலாவல் |
| கல்யாணி | மால்கோஷ் |
| சுத்த சாவேரி | தோடி |
| சரசாங்கி | பைரவ் |
| ஹிந்தோளம் | துர்கா |

3. பின்வரும் முத்திரைகளை யுடைய வாக்கேய காரர்கள் யார்?

1) பத்ம நாப 2) வெங்கடேச 3) திருவேங்கட
4) குஞ்சரதாஸ 5) வாசுதேவ 6) முரளி

4. பின்வரும் முதலெழுத்துக்களையுடைய இவ்விரண்டு சங்கீத வித்வான்களின் பெயர்களைக் கூறுக.

1) M. S. 2) D. K. 3) T. N. 4) T. V. 5) T. R. 6) N. C.

5. பின்வரும் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடல்கள் யார்யாரால் இயற்றப் பட்டன? என்னென்ன ராகங்களில் அமைந்துள்ளன? (ஒலிப்பதிவில் பாடியவர் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது)

| | |
|---|---|
| 1) சாமகானப்ரியே | ஜி. என். பி. |
| 2) வண்டாடும் சோலை | எம். எஸ். சுப்புலெட்சுமி |
| 3) பிறவா வரம் தாரும் | எம். எம். தண்டபாணிதேசிகர் |
| 4) இன்னமும் சந்தேகப்படலாமா | சாத்தூர் ஏ. ஜி. சுப்பிரமணியம் |
| 5) கருணைத் தெய்வமே | டி. கே. பட்டம்மாள் |

6. முதற்கலத்தில் குருவினது பெயரும் இரண்டாவது கலத்தில் அவரது சிஷ்யரின் பெயரும் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாக இணைக்கவும்.

| | |
|---|---|
| அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் | எம். எல். வசந்தகுமாரி |
| மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர் | தஞ்சாவூர் எம். தியாகராஜன் |
| செம்பை வைத்யநாத பாகவதர் | உமையாள்புரம் சிவராமன் |
| டி. என். ராஜரத்தினம்பிள்ளை | மதுரை சோமசுந்தரம் |
| பாலக்காட்டு மணிஐயர் | காருக் குறிச்சி அருணாசலம் |
| ஜி. என். பாலசுப்பிரமணியம் | கே. ஜே. ஜேசுதாஸ் |
| சித்தூர் சுப்பிரமணியபிள்ளை | செம்மங்குடி ஸ்ரீநிவாசையர் |
| செம்மங்குடி ஸ்ரீநிவாசையர் | கே. வி. நாரணஸ்வாமி |

(விடைகள் 28-ம் பக்கம்)

# பெரும் ஈழத்துத் திரைப்பட, மெல்லிசை இசையமைப்பாளர்

28-6-88இல் கொழும்பில் காலமான பழம்பெரும் ஈழத்து இசையமைப்பாளர் திரு. R. முத்துசாமி அவர்கள் ஈழத்து மெல்லிசைப் பாடல் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர் என்றால் மிகையாகாது. ஆரம்பகால சிங்களத் திரைப்பட உலகிலும் தனிப்பெரும் இசையமைப்பாளராக விளங்கி சிங்கள மக்கள் மத்தியிலும் பெரும் புகழீட்டியவர்.

முறைப்படி கர்நாடக இசைபயின்று வயலின்வித்துவானாக விளங்கிய முத்துசாமிஅவர்களின் பூர்வீகம் தமிழ்நாட்டின் நாகர்கோவிலாகும். சிறுவயதிலேயே கொழும்பு வந்து இசைத்துறையில் பிரகாசித்தார். அந்நாளைய சிங்களத் திரைப்படங்களுக்கு இசையமைக்கும் வாய்ப்பைப் பெற்றார். சிங்களத் திரையுலகில் அப்போது இசையமைப்பாளர்களோ, வாத்தியக் கலைஞர்களோ இல்லாத காலமென்றே கூறலாம். முத்துசாமி அவர்கள் பல சிங்கள வாத்தியக் கலைஞர்களை உருவாக்கி, திரைப்பட வாத்தியக் குழுவும் அமைத்து சுமார் 75, 80 படங்கள்வரை இசையமைத்து சிங்களமக்கள் மத்தியில் மிகப்பிரபலமடைந்தார். நன்றாக ஹார்மோனியமும் வாசிப்பவராக விளங்கியதால் சிங்கள நாட்டுக்கூத்துக்களுக்கு ஹார்மோனியம் வாசித்து சிறு கிராமங்களிலும் பெயர்பெற்றார். முத்துசாமி "மாஸ்டர்" என்று இன்றைய சிங்கள இசைக் கலைஞர்கள் மரியாதையுடன் அழைப்பது வழக்கம். இவரது சேவையைக் கணித்து 1947இல் அன்றைய சேர்ஜோன் கொத்தலாவலையின் அரசாங்கம் இலங்கைப் பிரஜாவுரிமை கொடுத்துச் கௌரவித்தது.

திரைப்பட இசையமைப்பாளராக விளங்கிய முத்துசாமி அவர்கள் 1969ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிரந்தர நிலையக் கலைஞராகப் பணிபுரிய ஆரம்பித்தார். இவரது காலத்திலிருந்து ஈழத்து மெல்லிசைப் பாடல்கள் தனிமெருகு ஏறின. 1970இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இசைத்துறைத் தயாரிப்பாளனாக நான் சேர்ந்தபோது திரு. முத்துசாமி அவர்களுடன் நன்கு பரிச்சயம் ஏற்பட்டது. இரு வருடங்கள் மெல்லிசைப் பாடல் தயாரிப்பாளராகவும் நான் கடமையாற்றியதால் ஈழத்துக் கலைஞர்கள் பலரது பாடல்களும் எம்மால் தெரிவுசெய்யப்பட்டு பல புதிய பாடகர்களால் பாடப்பட்டு, முத்துசாமி அவர்களின் இசையமைப்பில் உருவாகி ஈழத்துப் பாடல் நிகழ்ச்சிகளில் அடிக்கடி ஒலித்தன. புதிய பாடகர்களானாலும் பொறுமையாக அவர்களுக்கு மெட்டுக்களை பாடிக் காண்பித்து உற்சாகப்படுத்தி குறுகிய காலத்தில் அதிகளவில் தரமான மெல்லிசைப் பாடல்கள் உருவாக முத்துசாமி அவர்கள் காரணமானார்கள்.

முத்துசாமி அவர்கள் கர்நாடக இசையிலும் தன்பங்கைச் செலுத்தத் தவறவில்லை. வானொலியிலும் கொழும்பில் பல இசை விழாக்களிலும் பலருக்கு பக்கவாத்தியம் வாசித்துள்ளார். 1979இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்வாத்தியப் பிரிவின் தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார். இவ்வாறு புகழடைந்த முத்துசாமி அவர்களுக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனதுஇறுதி மரியாதையை நன்கு செலுத்திக் கௌரவித்தது.

இவரது மகன் மோகன்ராஜ் நவீன பாணி இசையமைப்பில் நன்கு பிரகாசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

முத்துசாமியின் இசையமைப்பில் உருவான ஈழத்துத் திரைப்படங்கள்: மஞ்சள் குங்குமம், குத்துவிளக்கு, காத்திருப்பேன் உனக்காக, வெண்சங்கு.

**A. K. கருணாகரன்**

# தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

**ஒரு கண்ணோட்டம்**

சமீப காலமாக இரவு 8 45 இலிருந்து 10. 45 வரை ஒளிபரப்பப்படும் தூரதர்ஷன் தமிழ் நிகழ்ச்சிகள் யாழ் குடாநாட்டு இசை, நடன, நாடக ரசிகர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகும். சென்னைத் தொலைக் காட்சி நிலையத்தில் ஏற்கனவே ஒளிபரப்பப்பட்ட தமிழ் நிகழ்ச்சிகளும், மற்றும் தூரதர்ஷன் நிகழ்ச்சிகளும் ரசிகர்களுக்குப் பெரு விருந்து. இதுகாலவரை வானொலி மூலம் கர்நாடக இசை வித்வான்களின் பெயர்களை மட்டும் தெரிந்து வைத்திருந்தவர்களுக்கு தொலைக் காட்சி மூலம் பிரபல வித்வான்களைப் பார்ப்பது பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. கடந்த இரண்டு மாதங்களுள் நடைபெற்ற சில இசை நடன நிகழ்ச்சிகள் வருமாறு:

25–5–88 ல் ஒளிபரப்பான அலர்மேல் வல்லியின் நாட்டியம் மிக அருமை. பலகாலமாகவே உடல் அமைப்பை ஒரே சீராக வைத்திருக்கின்றார். விறுவிறுப்பான நிகழ்ச்சி தமிழ்ப்பதவர்ணம் "மோகமான" அனைவரையும் கவர்ந்திருக்கும். பதவர்ணம் என்று புரியாத மொழியில் இழுவலாக இல்லாமல் அர்த்தம் புரியக் கூடியதாக வர்ணமிருந்தது. லால்குடி ஜெயராமனின் பெஹாக் ராகத்தில்லானா கனகச்சிதம். ஜதிகளைக் கூறியவர் மிக விளக்கமாக உச்சரித்தார். நீண்ட ஜதிகள் ஆயினும் சிறப்பு.

பக்கவாத்தியம் வாசித்து பெயர் பெற்று விளங்கும் குமாரி கன்னியாகுமாரி வட இந்திய சிதார் வாத்தியக் கலைஞருடன் இணைந்தளித்த ஜுகல் பந்தி புதுமை விரும்பிகளை நன்கு கவர்ந்திருந்திருக்கும். சாதாரணமாக ஜுகல்பந்தி மிகப் பெரும் வித்வான்கள் ஆண்கள் பங்கேற்பது வழக்கம். ஆனால் கன்னியாகுமாரி மிருதங்கம் திருவாரூர் பக்தவத்ஸலத்தின் அனுசரணையுடன் ஹிந்துஸ்தானி சிதார் கலைஞருக்கு ஈடாக வாசித்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்.

20–5–88 தனஞ்செயன் குழுவினரின் நாட்டிய நாடகம்: தமிழக ஆண் நாட்டியக் கலைஞர்களுள் சிறப்பான இடம் தனஞ்செயனுக்கு உண்டு. தனஞ்செயனின் உடல் வாகும் அவரது அபிநயமும் அருமை. தமிழ்ப் பாடல்களானதால் அபிநயத்துடன் அர்த்தத்தையும் நன்கு தெரிந்து கொள்ளக் கூடியதாயிற்று. ஒளியமைப்பு நன்று.

27–5–88 குழலூதி வரும் கண்ணனை என்ற தமிழ்ப் பாடலுக்கு சிறப்பாக ஆடினார் பிரபல சினிமா நடிகை ரேவதி. முறைப்படி பரதநாட்டியம் பயின்ற ரேவதி கண்ணனை அழைத்துவாடி என்ற தேஷ் ராகப் பாடலுக்கும் நன்கு ஆடி தனது நாட்டியத் திறமையை நன்கு வெளிப்படுத்தினார்.

29-5-88 ல் கோபிகா கோபால் அவர்களின் மலையாள மோகினி ஆட்டம் சிறிது வேறுபட்டதாக இருந்தது. பரதநாட்டியத்தையே தொடர்ந்து பார்த்த ரசிகர்களுக்கு மோகினி ஆட்டத்தின் அபிநயமும், பாவமும் வித்தியாசமான ரசனையை அளித்தது.

இரவு 10 மணிக்கு ஒளிபரப்பான தியாகராஜ சுவாமிகளின் நௌகா சரித்திரக் கீர்த்தனைகளை நாட்டிய நாடகமாக பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. பாடல் ரூபமாக இதுவரை கேட்ட கீர்த்தனைகளுக்கு அபிநயம் பிடித்து ஆடியதை கீர்த்தனைகளைப் புரிந்தவர்கள் மட்டும் ரசித்திருப்பார்கள். கண்ணன் வேடமிட்டு ஆடிய சிறுமி மிக அருமை. ஜதிகளும் வெகு நேர்த்தி.

1-6-88 ஒளிபரப்பான ரத்னகுமார் அவர்களின் நாட்டியத்தில் இடம் பெற்ற "சிவாஷ்டகம்" நல்ல விறுவிறுப்பு. பிரபலமான "பருலன மாட்ட" காபி ராகஜாவளியின் பாவம் சிறப்பாயிற்று.

6–6–88 M. S. சுப்புலட்சுமி அவர்களின் திருவையாறு ஆராதனைக் கச்சேரி அற்புதம்

இந்த வயதிலும் அவரது சாரீர இனிமை ஒரு கொடைதான். பந்துவராளி ''நாரத முனி'' கீர்த்தனையில் நிரவல் கச்சிதம். கரகரப்பிரியா ராக ஆலாபனை சம்பிரதாய பூர்வமாக இருந்தது. தாரஸ்தாயிப் பிரயோகங்களும், வரவேண்டிய பிடிகள் அனைத்தும் சரளமாக வந்தன.

13-7-88 ல் கடைய நல்லூர் வெங்கட்ராமன் அவர்களின் பாட்டு சென்னை வானொலியில் பணிபுரியும் இவர் செம்மங்குடியின் சிஷ்யர். நல்லஞானம். பந்துவராளி ஆலாபனையும் ராமநாதம் பஜேஹம் க்ருதியும் நன்று. சாரீரத்தில் கனதி குறைவானதால் காது நிறையவில்லை.

இரவு 9.45க்கு பிரபல விமர்சகர் ''சுப்புடு' வின் பிரதியாக்கத்தில் ''சக்தியின் சிவன்'' நாட்டிய நாடகம் ஒளிபரப்பாயிற்று. இசையமைப்பு, நட்டுவாங்கம் இரண்டும் பிரபலபாடகி ராஜேஸ்வரி. தமிழ் நாட்டிய நாடகமானதால் கதையமைப்பு தெளிவாகப் புரிந்தது. சிவன், பார்வதி சம்பாஷணையே சுமார் 20 நிமிடங்கள் நடந்தது. ஆனாலும் அலுப்புத் தட்டவில்லை.

14-6-88 ல் புதிய இளம் பாடகிகள் உமா பிரபாகரன், ரமா சுப்ரமண்யம் ஜோடிக் கச்சேரி வெகுநேர்த்தி. பொருத்தமான குரல் வளம். கல்யாணி ஆலாபனையும் கிருதியும் நன்கு சோபித்தன. பக்க வாத்தியக் கலைஞர்களும் புதிய இளம் கலைஞர்கள். ஆனாலும் அனுபவம் மிக்க கலைஞர்களின் கச்சேரி போல் சிறப்பாக அமைந்தது. எதிர் காலத்தில் சிறந்த ஜோடிப் பெண் பாடகிகளாக மிளிருவார்கள்.

11-7-88 ல் மஹாராஜபுரம் நாகராஜன் அவர்களின் இசையரங்கு பிரபல மஹாராஜபுரம் பாணி. திரு. சந்தானம் அவர்களின் ஒன்று விட்ட சகோதரன். ஆரபி ஆலாபனை அப்படியே மஹாராஜபுரம் சந்தானம் அவர்களது பாணி. குரல், சங்கதிகள் வல்லின மெல்லின பிரயோகம் போன்றவையுடன் சுவையாக இருந்தது.

13-7-88 ல் ஒளிபரப்பான K. V. நாராயணஸ்வாமி அவர்களின் இசைக்கச்சேரி அற்புதம். ''மனமிரங்காதா'' கீர்த்தனையும் மாயாமாளவகௌளை ராக ஆலாபனையும் மிக உருக்கம். நாகஸ்வராவளி ஆலாபனை கே. வி. என்னுக்கே உரிய ஸ்டைல். அதன் நிரவலோ மிகப்பிரமாதம். இசைக்கலைஞர்களும் மாணவர்களும் எத்தனையோ விஷயங்களை அறியக் கூடியதாயிருந்தது.

M. S. கோபாலகிருஷ்ணன் வயலினும் திருச்சூர் நரேந்திரன் மிருதங்கமும் சேர்ந்து ரசிகர்களை ஆனந்தக் கடலில் ஆழ்த்தியது.

ரசிகப் பிரியா




''எதுக்காக இரண்டு தம்புரா வச்சிருக்காங்க?''

''ஏதாவது ஒன்றுடனாவது சுருதி சேருதா என்று பார்ப்பதற்காக''

# "பல்லவி" குறுக்கெழுத்துப் போட்டி இல. 1

(போட்டி ஆசிரியர்: S. N. நடராஜ ஐயர்)

1-ம் பரிசு ரூ. **100/-** 2-ம் பரிசு ரூ. **50/-** 3-ம் பரிசு ரூ **25/-**



## போட்டி விதிகள்

1. இத்துடன் விடைப்பத்திரம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. மேலதிக விடைப் பத்திரங்கள் ஒன்று ரூபா 1/- வீதம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. இப்போட்டியில் பங்குபற்றுவதற்கு எந்தவிதக் கட்டணமும் கிடையாது.
3. ஒருவர் எத்தனை பத்திரங்களையும் நிரப்பி அனுப்பலாம்.

4. முற்றும் சரியான விடையினை எவரும் அனுப்பியிராவிடில் மிகக்குறைந்த தவறுடையதும், சரியான விடைக்கு ஆகக்கிட்டியதுமான விடையனுப்பியவருக்கு முதற்பரிசு வழங்கப்படும்.

5. ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடையனுப்பியிருப்பின் அங்ஙனம் சரியான விடையனுப்பிய அனைவருக்குமிடையில் முதற்பரிசுத் தொகை சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

6. இரண்டாம் பரிசு, மூன்றும் பரிசுகள், முதலாம் பரிசுக்குரிய விடையின் அடுத்தடுத்த நிலையில் கணிக்கப்படும். இப்பரிசுத் தொகைகள் பிரித்து வழங்கும் ஒழுங்குமுறை முதற்பரிசுக்கு விதிக்கப்பட்டபடியேயாகும்.

7. போட்டிச்குரிய சரியான விடை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு ரகசியமாக முத்திரையிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

8. போட்டிபற்றிய எந்தவிடயத்திலும் போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

## போட்டி முடிவு திகதி 30-9-1988

போட்டியின் சரியான விடையும் முடிவுகளும் அடுத்த "பல்லவி" இதழில் வெளியிடப்படும்.

## விடைக்கான குறிப்புகள்

**இடமிருந்து வலம்:**

1. இவரைப் புகழ்ந்து இயற்றப்பட்ட பாடல் ஒன்றினைக் கொண்டே வித்துவான்கள் பொதுவாக இசைக்கச்சேரிகளைத் தொடங்குவது வழக்கம்.

4. தாளங்களில் பொருந்தும் இதில் ஐந்து வகைகள் உண்டு.

5. வயலின், வீணை, தம்புரா என்பனவற்றில் நாதம் உண்டாக்குவதற்கு இன்றியமையாத உறுப்பு.

7. "நவ" என்ற அடைமொழியைக் கொண்டமைந்த இராகமாலிகை வர்ணத்தைப் போல, இச்சொல்லையும் அடைமொழியாகக் கொண்டமைந்த ஒரு இராகமாலிகா வர்ணமும் உண்டு.

9. தஞ்சை இசைமேதைகள் நால்வருள் ஒருவர்.

10. உத்தர மேளச்சக்கரங்களில் ஒன்றுக்கு இப்பெயரிடப்பட்டுள்ளது.

13. இச்சொல்லில் அடங்கியுள்ள எழுத்துக்கள் முறையே "சிவமந்த்ரமுனகுமஜீவமு, மாதவமந்த்ரமுனகுராஜீவமு" என்ற இரண்டடிகளிலும் உள்ளன.

14. தாளக்கட்டுடன் அமைக்கப்பட்டு நிலைப்படுத்தப்பட்ட இசை உருப்படி.

16. எட்டு வகையான தானங்களில் இதுவும் ஒன்று,

17. ஸ்ரீதியாகராஜரின் தொகுதிக்கிருதிகளில் இந்த முத்திரை இணைந்திருக்கக் காணலாம்.

18. நாட்டுக்கூத்தில் வல்லவர்.

20. பழந்தமிழர்களின் இசைப் பாடல்களில் ஒருவகை.

23. சஞ்சாரி கீதங்களில் வரும் மாத்ருகா பதங்களில் இதுவும் ஒன்று.

24. அதிகம் பிரசித்தமில்லாத ஒரு ஜன்னியராகம்.

26. தேவாரங்களில் வரும் பண்களில் ஒன்று.

28. எழுத்துக்கள் மாறிக்கிடக்கும் இதில் ஒரு நரம்புக் கருவி மறைந்திருக்கிறது.

29. இந்த வாத்தியங்களில் சிறப்புமிக்கது மிருதங்கம்.

30. பாம்புப்பிடாரனது இசைக்கருவி:

31. இசை நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு தோற்கருவி.

32. ஸ்வரங்களின் மொத்த எண்ணிக்கையை இது குறிக்கிறது.

33. நெடிலும் குறிலுமாக அமைந்துள்ள இந்த மிருதங்கச் சொல் சதுஸ்ர அமைப்பிலுள்ளது.

## மேலிருந்து கீழ்;

1. ''பகை சுரம் என்பதற்கு இது பெயராகும்.

2. தாள தசப்பிராணன்களில் ஒன்பதாவது பிராணன்.

3. துரித காலத்தில் பாடப்படும் தானம்.

4. ஒரு தாய் இராகம்

5. ஸரிகமநிஸ் – ஸ்நிமகரிஸ என்ற அமைப்புடையதாகிய இந்த ராகம் 13 ஆவது மேளத்தில் பிறந்தது.

6. இது ஒரு ''ஸ்வநாம முத்திரை''

8. ஒரு ஜன்னியராகம்

9. குழம்பியுள்ள இச்சொல் சீராக அமைந்தால் நடனத்தோடு தொடர்புடைய ஒன்றைக்குறிக்கும்.

11. பழங்கால இராகப் பிரிவுகளாகிய ''சாயாலக'' ''சங்கீர்ண'' என்பதைப் போல ........... என்பதும் ஒருவகை.

12. கரஹரப்பிரியாவில் பிறந்த இந்த ராகத்தில் ஸ்ரீ சுவாதித் திருநாள் இயற்றிய உருப்படி மிகப்பிரசித்தமானது.

13. இராக ஆலாபனை பத்ததியில் இது ஒரு பகுதியைக் குறிக்கும்.

14. பழங்கால சுத்த மேளத்தில் இடம் பெறும் ''ஸ்ருதிகளை'' இங்ஙனம் குறிப்பிடுவர்.

15. இசை உருப்படிகளின் அங்கங்களில் பிரதானமானது.

18 காலஞ்சென்ற ''காயகசிகாமணி'' பட்டம் பெற்று இசையுலகில் மிகப்பிரபலமான ஒரு பாடகர் இப்பெயராலேயே பிரசித்தம் பெற்றவர்.

19. ஒரு இராகத்தின் பெயர்.

21. ஒரு இராகத்தினை இப்படியாகப் பாடுவதற்கு நல்ல அநுபவம் தேவை.

22. தமிழ் இசை உருப்படி இயற்றிய ஒருவருடைய ''இதர நாம முத்திரை''.

23. இசை உருப்படிகள் இயற்றுவதற்குப் பொருத்தமற்ற இராகத்தை இசை நூல் இங்ஙனம் குறிக்கிறது.

25. ஒரு மிருதங்கச் சொல் இங்கே குழம்பியிருக்கிறது.

27. இது தமிழ்ப் பாடல்களை இயற்றிய மூக்குப்புலவர், நமசிவாயப் புலவர் என்பவர்களின் பெயர்களுக்கு முன் இணைந்துள்ள அடைமொழி.

## கலைப்புதிர் விடைகள் (வினுக்கள் 21ம் பக்கம்)

1. பந்துவராளி, காமவர்த்தனி; சுத்த தன்யாசி, உதயரவிச்சந்திரிகா; ஷண்முகப்ரியா, சாமரம்; சக்ரவாகம்; வேகவாஹினி; சிம்மேந்திர மத்திமம், சுமத்யுதி

2.

| | |
|---|---|
| சங்கராபரணம் | பிலாவல் |
| சுபபந்துவராளி | தோடி |
| மாயாமாளவகௌளை | பைரவ் |
| கல்யாணி | யமன் |
| சுத்த சாவேரி | துர்கா |
| சரசாங்கி | நட்பைரவ் |
| ஹிந்தோளம் | மால்கோஷ் |

3.
1) ஸ்வாதித்திருநாள்
2) பட்டணம் சுப்ரமணிய ஐயர்
3) அன்னமார்ச்சார்யா
4) கோடீஸ்வர ஐயர்
5) மைசூர் வாசுதேவாச்சார்
6) பாலமுரளி கிருஷ்ண

4.

| | |
|---|---|
| 1) எம் எஸ். சுப்புலெட்சுமி, | எம். எஸ். கோபாலகிருஷ்ணன் |
| 2) டி. கே. பட்டம்மாள், | டி. கே. ஜயராமன் |
| 3) டி. என். கிருஷ்ணன், | டி. என். சேஷகோபாலன் |
| 4) டி வி. கோபாலகிருஷ்ணன், | டி. வி. சங்கர நாராயணன் |
| 5) டி ஆர். மகாலிங்கம், | டி. ஆர். நவநீதம் |
| 6) என். சி. வசந்தகோகிலம், | என். சி. சௌந்தரவல்லி |

5.

| | |
|---|---|
| 1) பெரியசாமி தூரன் | ஆனந்த பைரவி |
| 2) கல்கி | ஹரிகாம்போதி |
| 3) பாபநாசம் சிவன் | லதாங்கி |
| 4) கோபால கிருஷ்ணபாரதி | கீரவாணி |
| 5) மதுரை ரி. ஸ்ரீநிவாசன் | சிந்துபைரவி |

6.

| | |
|---|---|
| அரியக்குடி | கே. வி. நாராயணஸ்வாமி |
| மகாராஜபுரம் | செம்மங்குடி |
| செம்பை | கே. ஜே. ஜேசுதாஸ் |
| டி. என். ஆர் | காருக் குறிச்சி |
| பாலக்காடு | உமையாள் புரம் |
| ஜி. என். பி. | எம். எல் வி |
| சித்தூர் | மதுரை சோமு |
| செம்மங்குடி | ரி. எம் தியாகராஜன் |

## தியாகராஜ கிருதி விளக்கம்

ராகம்: பருதாரி தாளம்: ஆதி

பல்லவி

ப்ரோவ பாரமா ரகு ராம
புவன மெல்ல நீ வை நந்நொகநி

அநுபல்லவி

ஸ்ரீ வாஸுதேவ அண்ட கோட்ல
குக்ஷினி உஞ்சு கோலேதா நந்து

சரணம்

கல சாம்பு தி லோ தயதோ நம
ருலகை யதிகாக கோபி
கலகை கொண்ட லெத்த லேதா
கருணாகர த்யாகராஜு நி

அண்ட சராசரங்களாகிய புவனங்கள் அனைத்திலும் நீயே நிரம்பியிருந்தும் என்னை மாத்திரம் காப்பாற்றுவது உனக்கு பாரமாயிருக்கிறதா, ரகு ராமா?

ஸ்ரீ வாசுதேவனாக அண்ட கோடிகளையும் உன் வயிற்றினுள் வைத்து நீ காப்பாற்றவில்லையா?

ஒரு முறை தேவர்களுக்காக மனமிரங்கிச் சமுத்திரத்தில் (மந்தர) கிரியையும் இன்னொருமுறை கோபியருக்காக (கோவர்த்தன) கிரியையும் நீ தாங்கி நிற்கவில்லையா?

# அண்மையில் நடந்த சில கச்சேரிகள்

''பல்லவி'' முதல் வெளியீட்டு விழா வன்று அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத் தினர் நடாத்தும் ஏப்ரல் மாத போயா தின இசை நிகழ்ச்சியில் திரு. சிவஞான சேகரம் அவர்கள் பாடினார்கள் கனமான சாரீரம், ஆனால் துரிதகால சங்கதிகளுக்கு குரலைப்பேசவைப்பதற்கு முயற்சிக்க வேண் டும். முக்கியமாக ராக ஆலாபனைக்கு இது மிக அவசியம். ஜனரஞ்சனிராக தமிழ் வர்ணம் அதிகம் பழக்கத்திலில்லாதது. கச்சேரியின் ஆரம்பத்திற்கு நல்ல களையைக் கொடுத்தது. சௌராஷ்டிரராக விநாயகா சரணம் அந்த வேகத்தைத் தொடர வைத் தது. ஆபோகிராக ஆலாபனை சிறிதளவு பாடினாலும் கச்சிதமாக அமைந்தது. கச்சேரி ஆரம்பிக்க நேரமாகி விட்டதால் சுருக்க மாக முடிக்க வேண்டியதாயிற்று.

* * *

அண்ணாமலை மன்றத்தின் மே மாத நிகழ்ச்சிகளில் திலகநாயகம் போல் அவர்கள் பாடினார்கள். கச்சேரிகளில் கிரகபேதம் செய்வதை இவர் வழமையாகக் கொண் டுள்ளார். அன்றும் ஆரபிராக ஸ்வரத்தின் போது ரி, ம, ப, ஸ்வரங்களை கிரகபேதம் செய்து முறையே ஆபேரி, மோகன கல் யாணி, கேதாரகௌளை தெளிவாக பலருக் கும் புரியும் படி பாடினார். கீர்த்தனைகளை மிகவேகமாகப் பாடுவதைத் தவிர்த்து நிதா னமாகப் பாடுவதற்கு முயலவேண்டும். ஸர ஸாங்கி ஆலாபனை, தானம், பல்லவிதிரி காலம், திஸ்ரம் முதலியன மிகக்கச்சிதம். முக்கியமாக கிரகபேதமும், ராகம், தானம், பல்லவியும் இசை பயிலும் மாணவர்களுக்கு நன்கு பயனளித்திருக்கும். வெங்கடேஸ்வர சர்மா வயலின் கிரகபேதத்தில் நன்கு ஒத் துழைத்தார். பாலச்சந்திரசர்மா பல்லவியின் போது பாடகருக்கு அனுசரணையாக நன்கு வாசித்தார்.

* * *

*18-6-88* இல் ''ஆலாபனாவின்'' மாதாந் திர இசை நிகழ்ச்சி ஆதீனத்தில் நடை பெற்றது. வளரும் கலைஞர் வரிசையில் செல்வன் மதனுகரன் தயாபரனின் புல்லாங் குழல் முதலில் ஆரம்பமாயிற்று. இந்த இளைஞரின் அரங்கேற்றம் சுமார் இருவரு டத்திற்கு முன்பு நடைபெற்றது. இந்த இடைவெளியில் அவரது வளர்ச்சி கச்சேரி யில் நன்கு பிரதிபலித்தது. பஞ்சரத்தினக் ருதி கச்சேரிக்கு ஒரு பந்தாவை ஏற்படுத் தியது. எந்தமுக்தோ பிந்துமாலினி ராகக் கீர்த்தனையைத் தயாபரன் நன்கு வாசித் தார். மோகன ஆலாபனை, உருப்படி வாசித்த விதம் ஸ்வரத்தில் பக்க வாத்தியங்களுடன் பிசகாமல் வாசித்த தன்மை இவர்மேலும் புல்லாங்குழலில் சிறப்படைவார் என்பதை எடுத்துக்காட்டியது. ஷட்ஜத்தில் சுருதி யுடன் நிற்கும்போது இன்னும் கொஞ்சம் கவன மெடுப்பது நன்று. பக்கவாத்திய மும் துடிப்புள்ள இளைஞர்கள், கண்ணன் வயலின், கிருபாகரன் மிருதங்கம் கண்ண தாசன் கடம். இந்த இளைஞர் குழு வழமைபோல் நன்று.

* * *

ஆலாபனாவின் அன்றைய பிரதான இசைக்கச்சேரியில் பாடியவர் எஸ். பத்ம லிங்கம் அவர்கள். ஒலிபெருக்கிக்கேற்ற நல்ல கனமான சாரீரம். சங்கதிகளும் நன்கு பேசிற்று. லதாங்கி ராக ஆலாபனையை விஸ்தாரமாகப்பாடி நிரவல், ஸ்வரமும் எது வித பிசகின்றிப் பாடிக் கச்சேரியைக் களை கட்டச்செய்தார். கச்சேரியின் முன்பகுதிப் பாடல்களில் மாற்றங்களுடன் பாடியிருந் தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். காரணம் சூர்யகாந்தம், ஹிந்தோளம் சதுஸ்ருதி தைவத பிரயோக ஆலாபனை, சலநாட்டை, லலிதா இப்படியான ராகங்கள் தொடர்ந்து பாடியமை, அநேகமாக இந்த ராகங்கள் ஒரேவித ரசனையைக் கொடுக்கக் கூடியவை. அன்று பக்கவாத்தியக் கலைஞர் கள் வெங்கடேஸ்வர சர்மா வயலின், பாலச்சந்திரசர்மா மிருதங்கம், கண்ண தாசன் கடம் மிருதங்க தனி ஆவர்த் தனம் சிறிது நீண்டு விட்டது. பக்கவாத்

தியக் கலைஞர்கள் பாடகரை ஒட்டிப்போக வேண்டும், முந்தக்கூடாது.

* * *

அண்ணாமலை மன்றம் ஜூன்மாத போயா தினத்தில் பாடியவர் திருமதி நாகேஸ்வரி ப்ரமானந்தா. அனுபவம் மிக்க பாடகியான இவரது சாரீரம் தாரஸ்தாயி பிரயோகங்களில் இன்னும் நன்றாகப் பேசுவது சிறப்பு. ஷண்முகப்பிரியா சிறிதளவு பாடினார் நடுநடுவில் யோகர் சுவாமிகள் பாடல் ஒலித்தது பக்தி ரசமாக இருந்தது. முக்கியமாக சங்கராபரண ஆலாபனை சம்பிரதாய பூர்வமாக என்னென்ன பிரயோகங்கள் வரவேண்டுமோ அத்தனையும் வந்து ஒரு நிறைவை ஏற்படுத்தியது. ஸ்வரக் குறைப்பில் இன்னும் வித்தியாசமான சஞ்சாரங்களைச் செய்திருந்தால் மிருதங்கத்துடன் இன்னும் பிடிப்பாகச் சேர்ந்திருக்கும். வயலின் பாக்கிய லக்ஷ்மி நடராஜாவின் ஷண்முகப்பிரியா, சங்கராபரண ஆலாபனைகள் சுத்தமாகவும் சுச்சிதமாகவும் அமைந்தன. துரிதகாலப் பிரயோகங்களை இன்னும் கொஞ்சம் சேர்த்திருக்கலாம். மகேந்திரன் மிருதங்கமும், துரைராஜா கெஞ்சிராவும் மிகஅனுசரணை.

ரசிகப்பிரியா

## வட்டுக்கோட்டை ரஸிக கலாமன்றம்

மேற்படி மன்றத்தின் ஆரம்ப இசையரங்கு அண்மையில் சித்தங்கேணி சிதம்பரேசர் தேவஸ்தானத்தில் அளவையூர் எம். பி. பாலகிருஷ்ணன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியுடன் தொடங்கியது, ஞானவிநாயகனே (கம்பீரநாட்டை), ஸரஸிஜநாப (நாககாந்தாரி) ஆகிய உருப்படிகளின் பின் ஸ்ரீரஞ்சனி ராக ஆலாபனை செய்து புவினி தாஸுடனி என்ற தியாகராஜர் கிருதியை வாசித்தார். அதனையடுத்து கானடா, தேஷ் ஆகிய ராகங்களில் சில்லறைகளின் பின் திருப்புகழுடன் கச்சேரி முடிவடைந்தது.

அதன் பின் திரு. ஏ. கே. கருணாகரனின் இசைக்கச்சேரி நடந்தது. கானடா ராக அடதாள வர்ணத்துடன் ஆரம்பித்து ஹம்ஸத்வனி, வராளி ராக உருப்படிகள் சுருக்கமாகப் பாடப்பட்டன. கல்யாணி ராக ஆலாபனையும் உன்னையல்லால் என்ற கீர்த்தனையும் ரசிகர்களைக் கவர்ந்தன. சுத்த தன்யாசியில் நாராயண என்ற உருப்படியில் அவரது குரு மகாராஜபுரம் சந்தானத்தின் சாயல் காணப்பட்டது. அடுத்துப்பாடிய காம்போதி ராக ஆலாபனையும் எவரிமாடவில் நிரவல் கற்பனஸ்வரம் முதலியன வெகுஜோர் இறுதியில் ராகமாலிகையில் திருப்புகழும் குருவின் சிவரஞ்சனித் தில்லானாவும் பாடப்பட்டன. தில்லானா திருப்புகழுக்கு முந்தியிருக்கலாம். திரு. வெங்கடேஸ்வரசர்மா வயலினும் அவரது சகோதரர் திரு. பாலச்சந்திரசர்மா மிருதங்கமும் மிகவும் அனுசரணையாக வாசித்துப் பாடகருடன் நன்கு ஒத்துழைத்தனர்.

நெல்லியான்

## அரங்கேற்ற வெள்ளி விழா

இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன் அரங்கேற்றம் நடந்த அதே பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் மண்டபத்தில் இம் மாதம் 4ம் திகதி திரு. எஸ். கணபதிப்பிள்ளையின் வெள்ளிவிழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சிறிது நேரம் நடந்த அவரது கச்சேரி மிகவும் சுச்சிதமாயிருந்தது திரு. ரி. வி. விநாயகமூர்த்தி வயலினும் திரு.எஸ் மகேந்திரன் மிருதங்கமும் திரு எம். சிதம்பரநாதன் கஞ்சிராவும் வாசித்தனர். வயலின் ஒத்துழைத்திருந்தால் கச்சேரி இன்னும் நன்றாக இருந்திருக்கும்.

பல பெரியோர்களும் சங்கீத வித்வான்களும் அண்ணாமலை இசை மன்றம், இளங்கலைஞர் மன்றம், யாழ் நுண்கலை மன்றம் ஆகிய மன்றங்களும் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி வாழ்த்துரைகள் வழங்கியும் மாலைகள் சூட்டியும் அவரைக் கௌரவித்தனர்.

கமாஸ்

# தெரிந்துகொள்ளுங்கள்

தொகுப்பு: நல்லைக்குமரன்

## 'இளம் மேதைகள்'
## (YOUNG MAESTROS)

1. கர்நாடக இசை மேதை மஹாராஜபுரம் சந்தானம் அவர்கள் திறமையுள்ள பல இளம் கலைஞர் இந்த ஒலிப்பதிவு நாடா வரிசையில் அறிமுகப்படுத்துகிறார். இதில் முதலில் இடம் பெறுபவர் நாகை முரளீதரன். வயலின் கலைஞர் நாகை முரளீதரன் ஆரம்பத்தில் வயலின் வித்துவான் ஆர். எஸ் கோபாலகிருஷ்ணனிடம் பயிற்சிபெற்றவர். நல்ல பாராட்டுக்களைத் தேடிக்கொண்டவர். தொடர்ந்து மஹாராஜாபுரம் அவர்களிடம் பயின்றார். மஹாராஜம் சந்தானம் அவர்களுடனும் மற்றும் பல சங்கீத வித்துவான்களுடனும கச்சேரிகள் செய்து மேலும் வளர்ச்சியடைந்துள்ளவர். இந்த ஒலிப்பதிவு நாடாவில் தனக்கே உரித்தான பாணியில் சில ராகங்களை வழங்கியிருக்கிறார். மேலும் இருபக்கங்களில் சித்தி விநாயகம், மனவ்யால உட்பட ஸ்ரீமுத்துஸ்வாமி தீட்சிதர், ஸ்ரீதியாகராஜர், ஸ்ரீசியாமா சாஸ்திரி இவர்களின் க்ருதிகளை அற்புதமாக வழங்கியுள்ளார். பக்கவாத்தியங்கள். வேலூர் ராமபத்ரன் மிருதங்கம் ஸ்ரீ T. H. விநாயகராம் கடம்.

இந்த ஒலிப்பதிவு நாடாவைத் தொடர்ந்து இதேவரிசையில் இன்னும் பல இளம் வித்துவான்களை அறிமுகப்படுத்த இருக்கிறார் மஹாராஜப்புப் சந்தானம் அவர்கள்.

சினிமா எக்ஸ்பிரஸ் – 15-588

2. ஸ்ரீ. M. சந்திரசேகரன் அவர்கள் பிரபல வயலின் மேதை என்பது பலருக்கும் தெரியும் – ஆனால் அவர் ஒரு சிறந்த பாடகர் என்பது சிலருக்குத்தான் தெரியும். இன்று அவர் மேடைகளில் இசைக்கச்சேரிகள் நிகழ்த்திவருகின்றார். அண்மையில் அவரது இசைக்கச்சேரியைக் கேட்கும் பாக்கியம் பெற்றேன். சுருதிசுத்தம்-லயசுத்தம், பொருளறிந்து சொற்களைப் பிரித்துப் பாடும் திறமை, கர்நாடக சுத்தமான இராக ஆலாபனை-கச்சிதமான ஸ்வரப்பிரஸ்தாரம் இத்தனையும் சேர்ந்த ஒரு அபூர்வமான கச்சேரி. ஆரம்பத்தில் பாடிய வர்ணம் அவரது சொந்த சாகித்தியம் என்று அறிந்தவுடன் இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்தது. 6-5-88 வெள்ளியன்று மாலை 6-30 மணிக்கு மயிலை ஸ்ரீ தியாகராஜ ஸங்கீத வித்வத் சமாஜத்தில் நிகழ்ந்த இக்கச்சேரிக்கு அவரது மகள் பாரதி கோபால கிருஷ்ணன் வயலினும், திருவிடை மருதூர் ராதகிருஷ்ணன் மிருதங்கமும் பக்கவாத்தியகமாக அமைந்து சிறப்புற வாசித்தார்கள். நன்றியுரை சொன்ன சீர்காழி ஜெயராமன் அவர்கள் இன்றைய கச்சேரி சாதாரண கச்சேரி அல்ல – இது தெய்வீகமான கச்சேரி என்று சொன்னது எல்லோர் மனதையும் தொட்டது. இருவிழிப் பார்வையும் அற்ற ஸ்ரீசந்திரசேகரன் அவர்களுக்கு ஆண்டவன் வாய்ப்பாட்டு, வயலின் என இருகலைகளைக் கண்கள் பேரால் அருளியுள்ளார்.

## வி. என். பரத்வாஜ்

3 அப்பய்ய தீட்சிதர் என்ற வடமொழி விற்பன்னரின் வம்சத்தைச் சார்ந்த டாக்டர் வி. என் பரத்வாஜ் அவர்கள் தற்போது இந்தியன் ஏர் லைன்ஸில் தலைமை மருத்துவ நிபுணராகப் பணிபுரிந்து வருகின்றார். மருத்துவத் துறையில் மட்டுமன்றி இசைத் துறையிலும் அவருக்கு ஆர்வமும் ஆற்றலும் இருக்கிறது என்பதை அண்மையில் அவர்-பாடி வெளியிடப்பட்ட 'ஆப்காஸாத்' (இந்திகஸல்) மற்றும் "அம்பிகை இசை மாலை" (தமிழ் பக்தி பாடல்கள்) அடங்கிய இரண்டு ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. டாக்டர் பரத்வாஜ் கர்நாடக இசை, இந்துஸ்தானி பாடல்கள் – கஸல் பஜனைப் பாடல்கள் எல்லாவற்றிலும் போதிய பயிற்சி பெற்று இந்தியா முழுவதிலும் 250க்கும் மேற்பட்ட இசை நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார். அதிசயராகம் என்ற திரைப்படத்திலும் வாணிஜெயராமுடன் இணைந்து பாடியிருக்கிறார்.

(சினிமா எக்ஸ்பிரஸ் 15-5-88)

# சரணம்

"பல்லவி" முதலிதழுக்கு நாம் எதிர் பார்த்ததைவிட அமோகமான வரவேற்புக் கிடைத்ததையிட்டு நாம் பெருமிதமடைகின்றோம். ஈழத்தில் மட்டுமன்றித் தமிழ் நாட்டிலுங்கூடப் பெரும் மதிப்பையும் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது. இசை, நடனத்துக்கென இது போன்ற ஒரு தமிழ்ச் சஞ்சிகை அங்கு இல்லாதது இதற்கொரு காரணமாயிருக்கலாம். மேலும் ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, மலேஷியா, சிங்கப்பூர் முதலிய கலைஞர்களும் கலாரசிகர்களும் வாழும் இடங்களிளெல்லாம் பெருமையுடன் பவனிவருகிறது "பல்லவி". எமது முயற்சி வீண்போகவில்லை என்பதையிட்டு எமக்குப் பெருமகிழ்ச்சி. இவற்றிலிருந்து ரசிகர்களின் ஆதரவு தொடர்ந்தும் பல்லவிக்குப் பெருமளவில் கிடைக்குமென்பதில் ஐயமில்லை எனலாம்.

சென்ற இதழில் நடனத்தைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை என்பது பொதுவான ஒரு குறை. இதைப் பலர் எமக்கு எடுத்துக்காட்டியுள்ளனர். இப்படியான ஓர் ஆக்கபூர்வமான விமர்சனத்தை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். பரத நாட்டியத்துக்கென்றே தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த திருமதி ருக்மிணிதேவி அருண்டேலைப் பற்றிய ஒரு கட்டுரை இம்முறை வெளிவருவது மிகவும் பொருத்தமே. மேலும் தொலைக்காட்சியில் வரும் நடன நிகழ்ச்சிகளைப் பற்றிய சுருக்கமான குறிப்புரைகளும் இவ்விதழில் இடம்பெறுகின்றன.

இசை நூல்கள், மிருதங்கம் முதலிய ஆய்வுக்கட்டுரைகள் இம்மலரில் காணப்படுகின்றன. முக்கியமாகப் பண்டைய இசை நூல்கள் பற்றிய உரை இசை அறிமுறை ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகுமென நம்புகின்றோம். குறுக்கெழுத்துப் போட்டி ஒரு புதிய அம்சமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இசை, நடனத்தைப் பற்றிய பொதுவான அறிவைப் பரப்புவதே இதன் முக்கிய நோக்கமாகும். போதிய ஆதரவு கிடைப்பின் இது தொடர்ந்தும் வெளிவரும். பல்லவியைப் பற்றிய எமது வாசகர்களின் கருத்துக்களை அறிய ஆவலாயிருக்கிறோம்.

நிர்வாக ஆசிரியர்

---

## குருமடத்தில் இசை

சென்ற மாதம் கொழும்புத்துறை குருமடத்தில் ஏ. கே. கருணாகரனின் இசையரங்கு நடந்தது. கர்நாடக சங்கீதம் பற்றிய அறிமுகமும், அனுபவமும் இணைந்த இந்த நிகழ்ச்சி எமது மரபில் ஒரு புதிய தொடக்கம் எனலாம். அடக்கமான சிறிய அரங்கு ஆர்வமான சுவைஞர்கள் (குருமடத்து மாணவர்கள்) அற்புதமான கச்சேரி. ஹம்சத்வனியில் கிறிஸ்தவ கீதம் ஒன்றுடன் ஆரம்பித்த கச்சேரியின் மையமாய் மோகனம் கனிந்திருந்தது. பகுதாரியில் ப்ரோவ பாரமா அனைவரையும் ஈர்த்து நின்றது. கச்சேரியினிடை குருமடத்து மாணவர்கள் விருப்பத்தின் பேரில் சில கிறிஸ்தவ விருத்தங்கள் தர்பாரி கானடா, மிஸ்ரசிவரஞ்சனி, பிருந்தாவன சாரங்கா போன்ற ஹிந்துஸ்தானி ராகங்களில் ஜனரஞ்சகமாய்க் கனிந்தன. அரங்கினை அறிந்து அதற்கேற்ப பாடல்களை, ராகங்களைத் தேர்ந்து தந்தது இந்த நிகழ்ச்சியின் உச்சத்திற்கான பிரதான அடிப்படை எனலாம்.

கண்ணனின் வயலின் பக்கவாத்தியமாகவே இசைத்திருந்தது. கிருபாவின் மிருதங்கம் இனிது ஒலித்தது. கண்ணதாஸின் கடம் சேஷ்டைகள் ஏதுமில்லாது அடக்கமாய் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தது.

-- சண்முகபாரதி

---

இம் மலர் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் 430 ஆம் இலக்கத்திலுள்ள செட்டியார் அச்சகத்தில் அச்சிடப்பட்டு யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 167 ஆம் இலக்கத்தில் வதியும் டபிள்யு. எஸ். செந்தில்நாதன் என்பவரால் வெளியிடப்பட்டது.

பல்லவிக்கு

எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

# அபிராமி அன் கோ

**66, மானிப்பாய் வீதி,**

**யாழ்ப்பாணம்.**

# A FINANCE COMPANY

ON THE MOVE AHEAD

When you're making your own personal decision you can also make a Professional Choice

# " SHABRA "

Privately, you'll be glad you did

INVEST WITH SHABRA

## 1. TERM DEPOSITS

| Period | Monthly | Maturity |
|---|---|---|
| 3 months | — | 14% |
| 6 ,, | — | 16% |
| 12 ,, | 16% | 18% |
| 24 ,, | 18% | 20% |
| 36 ,, | 20% | — |

## 2. INVESTMENT SAVING DEPOSITS
## 3. CERTIFICATE OF DEPOSITS

For Further details Please Contact

## Shabra Unico Finance Limited

61, New Buller's Road, Colombo - 4
T. P. 589310, 500576.

**207, POWER HOUSE ROAD, JAFFNA.**